தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு எண். 449

தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

இருபத்தி இரண்டாவது தொகுப்பு

(மருத்துவப் பகுதி)

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

2002

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு எண் : 449

தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

இருபத்திஇரண்டாவது தொகுப்பு

(மருத்துவப் பகுதி)

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்:

புலவர் வீ. சொக்கலிங்கம்

தமிழாசிரியர் (ஓய்வு)

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

2002 விலை: ரூ. 80

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற் பெயர்	:	தமிழ்ச் சுவடிகளின் விளக்கம் - தொகுதி 22
பதிப்பாசிரியர்	:	புலவர் வீ. சொக்கலிங்கம்
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்.	:	449
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதல் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	செப்டம்பர் 2002
தாள்	:	11.2 கி. கி. தமிழ்நாடு
நூல் அளவு	:	34 × 48 செ. மீ.
பக்கங்கள்	:	238
படிகள்	:	250
எழுத்து	:	10 புள்ளி
அச்சிட்டோர்	:	**ஸ்ரீ வேலன் பிரஸ்,** 132, S. P. கோயில் தெரு, சிதம்பரம். ☎ 220118
புத்தகக் கட்டு	:	அட்டைக் கட்டு
பொருள்	:	மருத்துவச் சுவடிகளின் விளக்க அட்டவணை
விலை	:	ரூபாய் 80–00.

வெளியீட்டாளர் முகவுரை

பன்மொழிச் சுவடிகளின் களஞ்சியமாக சரசுவதி மகால் நூலகம் திகழ்கின்றது. இந்நூலகத்தில் தமிழ், வடமொழி, மராட்டி, தெலுங்கு ஆகிய மொழிகளைச் சார்ந்த பல்லாயிரக் கணக்கான ஓலைச் சுவடிகளும், காகிதச் சுவடிகளும் இடம் பெற்றுள்ளன.

இவ்வரிய சுவடிகளுள் சிறந்தவை தேர்ந்தெடுக்கப்பட்டு, நூல்களாகப் பதிப்பித்து, வெளியிடப்பெற்று வருவதோடு, இந் நூலகத்தின் அனைத்துச் சுவடிகளுக்கும், சுவடி விளக்க அட்டவணைத் தொகுதிகளும் உருவாக்கப்பெற்று, வெளி யிடப்பெற்று வருகின்றன.

இந் நூலகத்தின் தமிழ்த்துறையில் இடம்பெற்றுள்ள மருத்துவ ஓலைச்சுவடிகளுக்கான அட்டவணைத் தொகுதி களுள் "தமிழ்ச்சுவடிகளின் விளக்கம்" 22-ஆம் தொகுதி யாக இந்நூல் வெளி வருகின்றது.

இத் தொகுதியை அரிதின் முயன்று உருவாக்கித்தந்த இந் நூலக முன்னாள் தமிழ்ப்பண்டிதர் திரு. வீ. சொக்கலிங்கம் அவர்களுக்கு என் பாராட்டுக்கள்.

இந்நூல் நன் முறையில் வெளிவரத் தேவையான நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்நூல் சிறப்பாக வெளிவர ஆவன செய்த நூலக நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், நூலகர் மற்றும் வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும், நன்முறையில் அச்சிட்டுத்தந்த சிதம்பரம் ஸ்ரீ வேலன் அச்சகத்தாருக்கும் எனது பாராட்டுக்கள்.

தஞ்சாவூர்,
21—9—2002

சி. கோசலராமன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்
மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்,

முன்னுரை

''மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு''

என்பது வள்ளுவர் வாய்மொழி. வாதம், பித்தம் சிலேத்துமம் ஆகியவற்றிற்கு ஒவ்வாதவற்றை உண்டலும், பொழுதறியாது உண்ணுதலும், தேனும் நெய்யும் அளவுக்கு மீறி உண்ணுதலும் ஆகிய மாறுபாடுகள் இல்லாத உணவினை, அளவோடு ஒருவன் உண்பானாயின், அவனது உயிருக்கு (உடலுக்கு)த் துன்பம் இல்லை, ஆகவே அளவோடு உண்டு வளமோடு வாழ வேண்டும்.

அஃது இல்லாதாருக்கு நோய் வருதல் எளிது. அறியாமை காரணமாக நோய்வரின், அதனைத் தணிக்கும் வகையினை, நம் முன்னோர்கள் கண்டறிந்து அனுபவத்தில் கண்டவற்றை, எதிர்வரும் மக்கள் வாழ ஏட்டுச்சுவடிகளில் எழுதிவைத்தனர். அவை உலகெங்கிலும் உள்ளன, நம் சரசுவதி மகாலிலும் உள்ளன. அவற்றுள் சில அச்சுவாகனமேறி, உலகோருக்கு நன்மைபுரிந்து வருகின்றன.

சுவடிகள் எல்லாவற்றின் விபரங்களை அறிந்துகொள்வான் வேண்டி, எமது மகால் மருத்துவச் சுவடிகளின் விவர அட்டவணைகளைத் தயாரித்து, விற்பனைக்கும் கொடுத்து வருகிறது

இதுவரை 3, 4, 5, 8, 9, 11, 12, 13, 14, 15. 17, 18, 19, 20 21, தொகுதிகள் வெளிவந்துள்ளன, தற்போது 22-வது தொகுதி வெளிவருகின்றது. எஞ்சிய தொகுதிகள் இலக்கியம்.

இந்த 22-ஆம் தொகுதியில் பலவிதமான நோய்கட்குரிய மருத்துவங்களைக் கொண்ட சுவடிகள் 1617 முதல் 1715 வரை இடம் பெற்றுள்ளன.

இத்தொகுதியினைப் பதிப்பிக்க அனுமதியளித்த, பெருமதிப்பிற்குரிய தஞ்சை, மாவட்ட ஆட்சியரும் இந்நூலக இயக்குநருமாகிய திருவாளர் சி. கோசலராமன் இ. ஆ.ப. அவர்கட்கும் மேற்படி மகால் நிருவாக அலுவலர் திருவாளர் சாமி. சிவஞானம், எம்.ஏ. அவர்கட்கும் நூலக வெளியீட்டு மேலாளர் திருவாளர் அ பஞ்சநாதன் எம்.ஏ ,எம்.எல்.ஐ.எஸ் அவர் கட்கும், ஒத்துழைப்புத்தந்த நூலகத் தமிழ்த்துறை, திருமது புலவர் ச. திலகம் அவர்கட்கும், திருவாளர் புலவர் ய. மணிகண்டன், எம்.ஏ ,பிஎச்.டி. அவர்கட்கும் நன்முறையில் அச்சேற்றித்தந்த சிதம்பரம் ஸ்ரீ வேலன் அச்சகத்தாருக்கும் எமது நன்றி உரித்தாகிறது.

இத்தொகுதியிலுள்ள குற்றங்களைந்து குணம் கொண்டு வாசித்தல் கற்றறிந்தமாந்தர் கடன்.

தஞ்சாவூர்
12—9—2002

புலவர். வீ. சொக்கலிங்கம்
முன்னாள் தமிழ்த்துறைத்தலைவர்
சரசுவதி மகால் நூலகம்

ஏமது சரசுவதி மகாலுக்குத்

தங்களிடமிருந்த மருத்துவச் சுவடிகளை அன்பளிப்பாகத் தந்த பெருந்தகையாளர்களின் பட்டியல்.

திருவாளர் அ. முருகேசன், அவர்கள்
37, நயினியப்ப நாயக்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை
சென்னை-2

திரு. R. விசுவநாதன் அவர்கள்
46, ஆட்டுக்காரத் தெரு, மானம்புச்சாவடி, தஞ்சாவூர்-1

திரு. G. பாலகிருஷ்ணன், அவர்கள்
434/6, 2-ஆம் தெரு, தெற்கு காலனி I.C.F., சென்னை-38

திரு. T. இராசலிங்கம், அவர்கள்
617-B, திருவள்ளுவர் அவின்யூ, கொள்ளிடம் டோல்கேட்
பிட்சாண்டார் கோயில் அஞ்சல், திருச்சி-621 216

திரு. G. நித்தியானந்தம், அவர்கள்
27, தேரோடும் கீழவீதி, ஆலங்குடி,
புதுக்கோட்டை வட்டம்-622 301

திரு. R. கோவிந்தசாமி, அவர்கள்
8, சந்தியப்பன் மேட்டுத்தெரு, பட்டுக்கோட்டை

திரு. S இளங்கோவன் அவர்கள்
(S/o சக்திவேல் அவர்கள்)
3, குழந்தைவேல் தெரு, மன்னார்குடி-614 001

வேண்டுகோள்

கருணையுள்ளங் கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன்மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும், அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவைப் பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்
21—9 2002

மாவட்ட ஆட்சியர்
மற்றும் இயக்குநர்
சரசுவதி மகால் நூலகம்.

பொருளடக்கம்

அ

இ

ஊ

க

கு

கை

கொ

கோ

தெ

தே

ந

நா

இதிலடங்கியுள்ள இலக்கியச் சுவடிகள்

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்

தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

22-வது தொகுப்பு

மருத்துவப் பகுதி

வரிசை எண் : 3206 சுவடி எண் : 1617

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 210 கி. எண்ணிக்கை : 4000 அளவு: 23 x 3 செ.மீ

பக்கத்திற்கு : 4--10 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

.... ரதம் ....மருது
பக்க வாதம்
...ாடுக்கு வாதம்
சந்து வாதம்
முகவாதம் இதுக்கு மருந்து

முடிவு :

கெந்தகம் வராகனெடை 2½ சாதிலிங்கம்
வராகனெடை 4. இவை சூரணம் பண்ணிச்
சாப்பிட கிரந்தி சூலைதீரும்
இது சேங்கொட்டை முறிவுமாகும்.

குறிப்பு :

இதில் பலவிதமான நோய்கட்குப் பலவிதமான மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3207 சுவடி எண் : 1618-a

கோரக்கர் சூத்திரம் அஷ்டகர்மம்–105

ஏடுகள் : 22 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 33×3செ.மீ
பக்கத்திற்கு : 8—9 வரிகள் ஆசிரியர் : கோரக்கர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு:

இது, எமது சுவடி எண் 531/D-1134 கோரக்கர் நொண்டிச்சிந்து போன்றது, இதில் 'நொன்டிச் சிந்து' என்று தலைப்பிடப் படவில்லை.

வரிசை எண் : 3208 சுவடி எண் : 1618-b

வாசமுனி சூத்திரம்–71

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 300 அளவு : 33×3 செ.மீ
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் வாசமுனி பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

.........புக்கினிய வழலையெனும் கர்மம்
பிரம்பிற் கரைபோலாம்
வாமத்திலா அப்பிரப்பிலாரது ஆசை
செய்ய.

முடிவு :

ஒப்பாரு மில்லை ஒளியாய்க் குருநந்தி
செப்பிய வாதந் திறந்திறந்தா ரெனவேதன்
அப்பனே வாதஞ்சித்தி அருநாளில்
முப்பு வழலைச் செக்காரம் முத்துமே. — 71
வாசமுனி சூத்திரம் முற்றும்.

காலம் :

றத்திராச்சி வருஷம் புரட்டாசி மாதம் 3-ஆம் தேதி எழுதி முடிந்தது.

குறிப்பு

இது. எமது சுவடி எண் 296-d/-D256 போன்றது. பாடவேறுபாடுகள் உள்ளன.

வரிசை எண் : 3209 சுவடி எண்: 1619

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 67 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 36×3½ செ.மீ.
பக்கத்திற்கு : 7—9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

.... கெட்ட
உண்மையுள்ள புலத்தியனே வாவென் றேதான்
தேனான வடமொழியைக் கய்யி லீந்து
திருவான பூரணத்தின் திறஞ்சொன் னாரே ! — 6

முடிவு :

உண்ணு வட்டிகள்

தக்கதங் கவட்டில்த்தானறுங் கணோரேத்த பித்தம்
மிக்கப் பொன்வெள்ளி மீதெழினும் யக்கத்து
மொக்கவே காந்தவட்டிலோதுந் திரிதோழம்போம்
மெய்க்குமே லுதிரமது மேவும் வெண்கலந்தானே ! — 740

குறிப்பு :

முதலேடு இல்லாததால் தலைப்பு தெரியவில்லை

இதில், வகை துகை, சவுமி கரு சாகரக் கரு, பரமாத்துமா தத்துவ விபரம் ரெணயிந்திரியம், கர்ம யிந்திரியம், சண்முகனார் தியானம், கென்றை மீன், ஆயளா மீன், சென்னல் கூனி, யிறாமுள்ளி முதலான தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3210 சுவடி எண் : 1620

ரோமரிஷி சூத்திரம் ... 100

ஏடுகள் : 15 கி. எண்ணிக்கை : 350 அளவு : 25 × 3 செ.மீ
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : ரோமரிஷி பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

மூலவட்டக் குருபாதம் காப்பு
முத்திக்கி வித்தான முதலே காப்பு
மேலவட்ட மானபறப் பிரமங் காப்பு
வேதாந்தங் கடந்துநின்ற மெய்யே காப்பு

முடிவு :

மேலென்னு மிருக்கையிலும் நடக்கும் போதும்
வேறுளாமல் சறங்களை விடாம லேற்று
நாலென்ன யெட்டென்ன யெல்லா மொன்று
நலமான அஷ்டாங்கம் மப்பியா சித்து
காலென்னு பிராணாமுணிச் செ............ — 75

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 671-a/D.1307 போன்றது

வரிசை எண் : 3211 சுவடிஎண் : 1621

ரோமரிஷீ 16

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 100 அளவு : 27 × 2½ செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : ரோமரிஷி பொருள்: மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

குறிப்பு :

இது , எமது சுவடி எண் 145/D-234 போன்றது.

வரிசை எண் : 3212 சுவடி எண் : 1622

அகத்தியர் — 205

ஏடுகள் : 54 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 30 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

காலம் :

தொடக்க ஏட்டில் விஷ்சு வருஷம் மார்கழி மாதம் 18-ந் தேதி ஞாயத்துக் கிழமை எழுதத்துடங்கினேனனவாறு.

கடைசி ஏட்டில். விஷ்சு வருஷம் தை மாதம் 4-ந் தேதி மங்களவாரம் சுப தெனத்திலே காலமே 9 மணிக்குமேல் யெழுதி முடிந்தது. முற்றும்.

குறிப்பு :

இது எமது சுவடி எண் 323-a/D 622 போன்றது. இதில், மற்றும் பல சுவடிகள் உள்ளன.

★ ★ ★

வரிசை எண் : 3213 சுவடி எண் : 1623-a

அகத்தியர் குருநாடி — 245

ஏடுகள் : 47 கி எண்ணிக்கை : 1000 அளவு : 25 × 3 செ.மீ
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்,

தொடக்கம் :

நான்றாக

ஓங்காரங் கொண்டெழுந்த பிரணவத்தின் செய்கை
உத்துணர்ந்து சூத்திரமாய் உரைத்த வாறும்
ஆங்காரங் கொண்டதொரு மனத்தைத் தேர்ந்து
அருவுருவாய் சுருபமெனும் மந்த நேர்மை
பாங்கான நாடிநரம் பான வாறும்
பழமறைதா னாராய்ந்து பாடி வைத்தேன்
நீங்கான கணபதியும் கந்தன் தானும்
நிசமாக வந்துதவுங் காப்புத் தானே ! — 1

முடிவு :

ஒருநூலா யடக்கிவைத்து விபர மாக
    ஒகோகோ தேர்ந்துசொன்னோம் வுலகோர் மெக்க
குருனாடி போலேயொரு நூலுஞ் சொல்லார்
    குறிப்பறிந்து யிந்நூலை கூர்ந்து பார்த்தோர்
பெருநூலைத் தேடியங்கே அலைய வேண்டாம்
    பின்னுமொரு சாத்திரத்தி லிதுபோ வில்லை
இருநூற்று நாற்பத்தி யஞ்சுந் தானே
    எண்ணிவைத்துக் கொடுத்தாற்போ லிருக்கு முற்றே ! 247

தேவிசகாயம்

சுப்பிரமணியன் துணையுண்டாக வேணும்.
அகத்தீசர் பாதமே துணை. தெய்வ சகாயம்

காலம் :

கரலருஷம், புரட்டாசி மாதம் 4-ந் தேதி ஆதிவாரனாள் அவுட்டநட்சத்திரம் எழுதி முடிந்தது. வேணும்

குறிப்பு :

இது, சிறந்த நூலாகக் கருதப் படுகிறது. இதில், வாதம், பித்தம், சிலேற்பனம், மலடான் செனிப்பு, வியாதியினுடகணக்கு, முதலிலான தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3214

சுவடி எண் : 1623-b

அகத்தியர் குருநாடி சுருக்கம் _ 44

ஏடுகள் : 11 கி. எண்ணிக்கை : 300 அளவு : 25×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது. எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சீர்பெறு முனிவர் வேந்தர்
    தெரிந்து பின் நூல்கத் தோர்கள்
பேர்பெறு கவிழி லுத்துப்
    பிணிபல உணர்ந்து தேர்ந்து

மூர்பல நாடிக் கெல்லாம்
உயர்குண நாடி நேர்மை
சேர்குரு நாடி நேர்மை
செயலுடன் கூற லுற்றறும். — 1

முடிவு :

பிடித்திருந்த கல்லுக்குப் பேர்தா னேது
பிரமூல தேவதையின் பேர்தா னேது
அடுத்திருந்த முலைப்பாலின் பேர்தா னேது
அணுவிரலும் சிறுவிரலும் அணைந்த லேது
தடுத்திருந்த கயரேது பைதா னேது
தவறாதே உகையிதென்று தானே யாய்ந்து
படித்திருந்த பண்டிதரே யிந்த நூலே
பழுதறவே யின்னதென்று பகரு வீரே ! — 40

குறிப்பு:

இது, முன்சொன்ன அகத்தியர் குருநாடி 247-ன் சுருக்கத்தைக் கூறுகிறது. உள் தலைப்புகள் இல்லை.

வரிசை எண் : 3215 சுவடி எண் : 1624

தன்வந்திரி பாலவாபகம் சிமிட்டு ரெத்தினச் சுருக்கம் — 360

ஏடுகள் : 48 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 32×3½ செ.மீ
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : தன்வந்திரி பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கெசமுக னடிவ ணங்கிக்
கேசரப் பொருளைச் கண்டு
வசமென வருவில் பூண்டு
வகையற சிசுவின் றோகங்
கசவற களிதுவ ஒக்கக்
கண்டுநா னுரைக்க வேண்டி
திசைமுனி யருளை நோக்கி
திகைமலர்ப் பேசற்ற நேனே ! — 1

முடிவு :

சத்திய மாகநான் சாத்திய முன்னூற்
சத்திய மென்னா சஞ்சலம் அகற்றிடுஞ்
சத்திய முன்னூல் சமுசிய மில்லைதான்
சத்திய வைத்திய யிரத்தின முற்றிற்றே — 360

சிவமயந் துணையாகவும்

காலம் :

ருத்திரோத் காரிவருஷம் மாசிமாதம் 5-ந் தேதி தற்ம்மந்திரி சுவாமிகள் சிமிட்டு ரெத்தினச் சுருக்கம் 360-ம் யெழுதியது.

முத்தும்

குறிப்பு :

இதில் குழந்தைகளுக்கு ஏற்படும் நோய், அது தீர்க்கும் மருந்து முதலியன கூறப்பட்டுள்ளன.

மூக்கு கெணத்தெண்ணை. ஊது மாந்த கெணம், ஆமைகெணம், சிங்கி மாந்தம், செங்கிரந்தி குணம், கருங்கிரந்தி குணம், வாலைக்கரப்பான், குளிதோஷம், எச்சி தோஷம், சிறுபிள்ளை கழிச்சல் கட்டுப்பட முதலான நல்ல பல தலைப்புகள் உள்ளன. சிறந்த சுவடி.

வரிசை எண் : 3216 சுவடி எண் : 1625-a

அகத்தியர் காவியச் சுருக்கம் — 16

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 100 அளவு : 18×3 செ. மீ
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஆதிமறைச் சாத்திரங்கள் பிறந்த வாறும்
அடிமுடியும் நடுவாகிப் பொருள்மூன் றாகி
வேதியனு மால்சிவனு நின்ற வாறும்
வேதமுட னாகமங்கள் பிறந்த வாறும்

முடிவு :

ஆணையப்பா முக்காலும் மாணை யாணை
அறிந்துணர்ந்த ஞானிகளை அடுத்துச் சேரு
பாணப்பா உண்டிருந்தாள் பதத்தைப் போற்றி
பதினாறுஞ் சிவசூட்சப் பொருள்தான் முற்றே ! — 16
முற்றும்
குருபாதமே துணை

காலம் :

குரோதன வருஷம் மாசிமாதம் 25-ந் தேதி சிவவேலு செட்டி கையொப்பம்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 236-d/D-396 போன்றது இதில் முழுமையாக இருக்கிறது.

வரிசை எண் : 3217 சுவடி எண் : 1625-b

சுப்பிரமணியர் அருச்சனை முதலியன

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 100 அளவு : 18×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மந்திரம் சாத்திரம் இலக்கியம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சுப்ரமணியார் அற்சணை

கந்தாய நமா கீர்த்திகா சுனவே நமா
குகாய நமா மேஷவாகனாய நாம
சண்முகாய நமா சிகிவாகனாய நமா
குமராய நமா துவிஜ புஜாய நமா
பாலநேத்ராய நமா துவிஜ நேத்ராய நமா

முடிவு :

பிரம காயத்திரி

ஓம் பூர புவா சுவா
தற்ச விதுரு வரேணியம்
பர்கோ தேவசிய தீமகீ
தீயோயோன பிரசோதயாத்

குறிப்பு :

இதில் சுப்பிரமணியர் அருச்சனை; அஷ்டோத்தரம் 32, சட்டமுனியார் சாடஷ்சரம் — 1, அகத்தியர் சடாஷ்சரம், சல ஆவாகனம், ரிஷிகோத்திரம், பிராத சந்தியா வந்தனம், சிவகயாத்திரி மந்திரம், பிரம காயத்திரி மந்திரம் ஆகியவை உள்ளன.

★★★★

வரிசை எண் : 3218 சுவடி எண் ; 1626

அகத்தியர் வைத்திய சூத்திரம் குருநூல்—600

ஏடுகள் : 102 கி. எண்ணிக்கை : 5000 அளவு : 29 × 3½ செ. மீ

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

வர்ணிய நமோஸ்து குருவே துணை

கருணைதரு மங்கரனை காப்பு
வாணிகலந்து யிந்த சூத்திரந்தான்
கருவாய்ப் பாடந் திருவுமையாள்
மனோன்மணித்தாய் செப்பக் கேட்டுத் தெளிந்து
குருனூலா கத்திரட்டிப் பாடக்
குருமகிமை சித்தியுண்டாம் ஞானம் வாய்க்கும்

முடிவு :

உண்டாகு மெழுனூர் வயித்தியத்தி லொடுக்கு
சூத்திர மெண்பதுண்டு பண்டாங் குரைத்தன்ப
துண்டுபாறு வழலைப்போக் கன்ப துண்டு
வேண்டாம் நூல்களிது போதும் விடாதே
நூல்களொருத் தருக்குங் கண்டா யறுநீற
வெளிவிடாதே காட்சி யெழுதி முகிந்ததுவே. — 610

அகஸ்திய சுவாமியன் வயித்திய
சூத்திரம் குருநூல்றுநூற் முற்றும்

குறிப்பு :

இதில், வளலை போக்கு, அப்புரகச் செந்தூரம், பாரிசவாய்வு. வாயுவு பூறுக்கு நிலை: வாயுவுக்கு ஞ்சிப்பால், மாத்திரைபேர் மருந்து சுத்தி, பாண்ட வயலுப்பு, விஷ்ணுசக்கிரபாணி, சஞ்சீவி மாத்திரை நூல்களில் சிவமுஞ் சக்கரமும் முதலான பல தலைப்புகள் உள்ளன.

—+ + +—

வரிசை எண் : 3219 சுவடி எண் : 1627-a

தன்வந்திரி கலைக்கியான தெண்டகம் — 100

ஏடுகள் : 28 கி. எண்ணிக்கை : 900 அளவு : 23×3 செ.மீ
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : தன்வந்திரி பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஸ்ரீராமசெயம்

அண்டமெனும் பரப்பிறமம் அருளே போற்றி
அன்யான மனோன்மணித்தாய் பாதம் போற்றி
குண்டமெனும் குண்டலியின் பாதம் போற்றி
குருவான பராபரத்தின் பாதம் போற்றி

முடிவு :

மைத்துமே நூறுக்குள் சகலை கலையெல்லா
மாட்டிவிட்டே னிதுக்குள்ளே பாரு பாரு
தைத்துமே யிதில்மேலே நாற்பதுதான் சொச்சம்
நலமான தெண்டகத்தின் கருவு முற்றே — 101

சிவமயம்

குருகிடாட்சம்

குறிப்பு :

இதில், குண்டலி தீட்சை, சுப்பிரமணியன் தீட்சை, வயிரவன் தீட்சை, சிவ தீட்சை, சத்தி தீட்சை, அஷ்ட கர்மத்துக்கு புங்கை எண்ணை, வெண்சாரை கற்பம், அஞ்சுகோல் செயநீர், வாஸல செயநீர் முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3220 சுவடி எண் : 1627-b

நந்தீசர் சூத்திரம் — 50

ஏடுகள் : 18 கி. எண்ணிக்கை : 400 அளவு : 23×3 செ. மீ
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : நந்தீசர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சிவமயம். ஸ்ரீராமசெயம். குருகிடாட்சம்.

மூலமுத லாதார முச்சுடராம் பொருளை
மூதறிவி னாலறியு முக்கோணப் பொருளை
காலுதலை மதுகாரணமாம் பொருளைக்
கருத்துணர்ந்தவர் கேழ்க்க காட்சிதரும் பொருளை

முடிவு

யேங்கியே உருகியதிற் பணவிடை செந்தூரம்
னிர்க்கையாய் குடுக்க மாத்தேழு குறையாது
நீங்காத சூதமுனி யுரைத்தவகை யெல்லாம்
நிசமாகுங் கண்டறித்து தேறிநீ பாரே ! — 50

நந்தி சூத்திரம் முற்றும்
தேவிசகாயம்

குறிப்பு.

இதில், நீலகண்டவாஙல, விடத்தலைவிசனல, சிங்காளயிரத பற்பம், ஸ்ரீராம செந்தூரம், செம்புசுத்தி, கெந்திசுத்தி துரிசிசெம்பு முதலான தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3221 சுவடி எண் : 1627-c

கோரக்கர் சூத்திரம்—200

ஏடுகள் : 64 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 23×3 செ.மீ
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : கோரக்கர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஸ்ரீராமசெயம் சிவமயம் குருவே துணை

சிவனொடு பார்ப்பதியுங் கயிலாசந் தன்னில்
சிறந்திருப்பார் கயிலாசஞ் மஞ்சுமலை யுண்டு
நவரத்தின கிரியொன்று சொற்னன் கிரியொன்று
நல்லவெள்ளி கிரியொன்று தாம்பிரக் கிரியொன்று

முடிவு :

போகுமடா நோய்களெல்லா மிறந்து போகும்பாரு
யியல்பான நூலிருக்கும் மருந்து தேடி
வரும்பொருள் கெட்டுதல்லாம் வகையாக யிந்து
வரிசையா யிருநூறும் வாங்கினால் நன்றே ! — 202

முத்தும்
தேவிசகாயம்

காலம் :

கரவருஷம் கார்த்திகை மாதம் 17-ந் தேதி

குறிப்பு :

இதில், செந்தூரம், வாய்வுக்கு லேகியம், பெரும்பாண்டு, பெரும்பாண்டுக்குப் பவள ற்பம், நெய் மூலம் ஒன்பதுக்கு, மூலக்கிராணி வகை முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3222 சுவடி எண் : 1627-d

போகர் வாலை பூசாவிதி

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 100 அளவு : 23 × 3 செ.மீ
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : போகர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

பாரப்பா வாலைத்தனைப் பூசை செய்ய
பதிவாக நவகோணம் யெட்டிதழு சூழ்

சேரப்பா யிருவளையம் வாசல் நாலும்
சிறப்பாக றீங்காரம் நடுவே விட

முடிவு :

நாடீநின்ற நடந்தேத்த யோகதாய் பூசை
நல்லவர்க்கு யெய்துமடா காமிக் கில்லை
பாடீயிந்த பதிமூன்று பாட்டுக் குள்ள
பலபூசை சிவபூசைப் பணிந்தி டாயே ! — 13
போக நாயனார் திருவாய் மலர்ந்தரு ளிய
வாலை பூசாவிதி முகிந்தது, முற்றிற்று
சர அண பவன் துணை

குறிப்பு :

இது, எமது சுவ்டி எண் 896-c D-1790 போன்றது. சுவடி எண் 796-D. 1603 போன்றது.

வரிசை எண் : 3223 சுவடி எண் : 1627-e

கருவூரார் மைகள்_32

ஏடுகள் : 9 கி. எண்ணிக்கை : 200 அளவு : 23 × 3 செ. மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : கருவூரார் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஸ்ரீராமசெயம்

உரைக்குரேன் மநப்புதனை சித்திரமாகி
உலகத்தோர் பிழைப்பதற்கு கருவை யெல்லாம்
திரைக்குரேன் சிவஞானம் தங்கித் தானால்
சித்திமுத்தி ரெண்டுமுண்டாம் யாரு யாரு

முடிவு:

சர்க்குமே க்ரசத்தி சதாசிவனும் கேட்டால்
போகுமே யாருவெல்லாம் போகருபன் செய்து பாரே ! — 42

முற்றிற்று

நாதர் சிங்கு

வட்டமா யிருக்குமதி பூண்டி ருக்கும்
வன்னியின் குலத்தின்பெயர் பூண்டி ருக்கும்
தொட்டதுரிசியை வெளித்திடுந்
துய்ய ரசத்தை கெண்டிடும்
பட்டண மெங்கும் சுத்யே பரீதேசி சண்ண
சுட்ட யெலும்பும் பொன்னகும் சொன்னேன்
பச்சிலை யிது பாரே — 1

முற்றிற்று

குறிப்பு :

இதில், அஞ்சனம், மறப்புமை, மறப்பு, மறப்பு அஞ்சனம், காயசுத்தி, மெழுகு வகாராம் முதலான தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3224 சுவடி எண் : 1627-f

தன்வந்திரி நிகண்டு—300

ஏடுகள் : 91 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 23 × 3 செ.மீ
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : தன்வந்திரி பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

காலம் :

கரவருஷம் ஆவாணி மாதம் 10-ந் தேதி தன்மந்திரியார் நிகண்டு யெழுதி முடிந்தது.

முற்றும்

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 248-f/D-437 போன்றது.

வரிசை எண் : 3225 சுவடி எண் : 1627-g

சட்டை முனியார் காயகல்பம்_100

ஏடுகள் : 27 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 23×3 செ.மீ
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : சட்டைமுனியார் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

காலம் :

கரவருஷம் ஆவணி மாதம் 16-ஆம் தேதி சட்டமுனிய கல்ப்பவிதி னூறு யெழுதி முடிந்தது. பழனியாண்டி துணையாகவும்.

குறிப்பு :

இது எமது சுவடிஎண் 351/D694, 352a/D 695 போன்றது. தலைப்பு 'சட்ட மூனியார் அருளிச் செய்த கல்ப்ப காயம் னூறு' என்றுளது.

வரிசை எண் : 3226 சுவடி எண் : 1627-h

தன்வந்திரி வாதகாவியம்_800

ஏடுகள் : 24 கி. எண்ணிக்கை : 800 அளவு : 23×3 செ. மீ
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : தன்வந்திரி பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சிவமயம்

ஆதிபொருளான யாருளான சற்வேசற்
அகண்டம்மொடு வேதமிது யருள்பதம் போற்றி
நீதிகுரு தன்மகன் நிட்களரூபனை
நிப்பதம் மெஞ்ஞான நெறஞ்சனம் போற்றி

முடிவு :

ணாச்சென்ற சுழிமுனை காந்த ரியத்தி
நலமான சிங்குவை யலம்புருட னாகும்
காச்சென்ற குருதனோடு சங்கினி வயிரவந்தான்
கனமாகுற மீதுபத்து கண்டு பாரே ! — 92

இதில் 92 பாடல்களே உள்ளன. இதில், கயிலைச் சித்தர், இந்திரிய கற்பம், முதல் குறி காரியத்தில் சொல்லுகிற வகை, சாதிலெட்சணைத்தின் குறிப்பு, துலாராசி மகிமை, கன்னிராசி மகிமை. ரிஷபராசி, மேஷராசி மிதுனராசி, கடகராசி, பஞ்சபூதக் குறிப்பு, பிரிதிவி, அப்பு, வித்து வகை முதலான தலைப்புகள் உள்ளன,

வரிசை எண் : 3227

சுவடி எண் : 1628

சுந்தரானந்தர் தண்டகம்

ஏடுகள் : 22 கி. எண்ணிக்கை 450 அளவு : 26 × 3 செ.மீ
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : சுந்தரானந்தர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரிஓம் : நான்றாக குருவாழ்க

அரிஓம் அரகர அக்கனமு மாகி
அதிலேதான் சுளித்த யிரு சுளியுமாகி
தெரியாத பொருளாகி சித்தறிவு மாகி
சிவமுகமாய் சத்தியுமாய் ரெண்டும் ஒன்றாய்

முடிவு :

பானென்ற அமுற்தத்தை அள்ளி யுண்டு
பாலகனா யளியிருந்து பண்ப தாக
யேனென்று யெழுபத்தி மூணுக் குள்ளே
இகபரமும் சித்தியாய் இருப்பார் முற்றே ! — 73

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 466-e/D- 1037 ‘சுந்தரமூர்த்தி தண்டகம்’ போன்றது. அதில், 33 செய்யுட்களே உள்ளன.

வரிசை எண்: 3228 சுவடி எண்: 1629-a

அகத்தியர் பரிபாஷை முதற் காண்டம் — 200

ஏடுகள் : 32 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 37 × 3 செ.மீ
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர்: அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

பரமஞானோதயத்தின் .... மறைப்பு நூ.........
அகத்தியர் பூரண காவியத்தில் எடுத்தெழுதிய பாட்டு

மெய்யான கண்ணாதுதான் தெய்வந் தெய்வம்
....
அடங்குநிலை தனையறிந்து ஒடிங்கி வாழே !...

அகத்தியர் சத்திசாலம் ஆயிரத்தி எரனூறு

ஆமென்ற ஆதியா னந்த மேவி
யாதியந்தஞ் சற்குருவின் னறிவாய் நின்ற
ஓமென்ற னாதவிந்து மதிவீ டாக
யுத்துநின்ற திரோதாயி மவுன மாகி

முடிவு :

பேறுபெற யினியுரைக்கும ரெண்டாங் காண்டம்
பிரமலபி யுள்ளவர்கட் கெய்து மெய்தும்
நூறுரை யிருத்துமடா முதற்காண்ட சாலம்
னோக்குமுன்னே பத்திசத்தி சித்தி முத்தே ! — 200
முதற்காண்டம் முற்றும்
சுப்பிரமணியக் கடவுள் துணை

குறிப்பு :

இதில் தலைப்புகள் வித்தியாசமாக உள்ளன. இதில், நாதவிந்து செயநீர், கூர்மசெயநீர், பூசை தகர் மூலம், பூசாவிதி, நாதநீர், ரசகுளிகை, படைவிலக்க மாரணத்தூள், கரிமிபார்வை முதலான பலதலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3229 சுவடி எண் : 1629-b

அகத்தியர் பரிபாஷை இரண்டாங் காண்டம் — 200

ஏடுகள் : 24(32-55) கி. எண்ணிக்கை : 1000 அளவு : 37×3 செ. மீ
பக்கத்திற்கு 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

இந்திரசாலம்
சத்திசாலம்
அந்தாதி

சித்திக்குந் தேவரமு துண்டவாரி சிகவசிய
முத்திக்கு மூலபதம்போற்றி முன்னுரை மோனவளி
சத்திக்கு சாலமிரு னூறுபாடலுந் தானுரைத்த
அத்திக் கரியுரிகொண்டோன் ரண்டாம் பதமாதி வஸ்கே ! — 1

முடிவு :

சேறாதே வூன்கொழுப்பு யீடு வாடை
செய்யாதே செத்தபிணக் கருவை நாளு
மேறாதே ரெண்டாங் காண்டத்தை விட்டு
யெறியாதே யிருநூறு மிந்தா முற்றே ! — 200

இரண்டாங்காண்டம் முற்றும்
ஆக காண்டம் ரெண்டுக்கும் விருத்தம் துகை பாட்டு — 400
சுப்பிரமணியக் கடவுள் துணை

குறிப்பு ;

இதில், கண்கட்டுமை, தம்பனமை, வேசைமை, வராகிநெய் திராவகம், வைத்தியம். விஷத்துக்கு, விரியன் விஷத்துக்கு, சூரணம் நயனத்துக்கும், பிளவையரையாப்பு சத்தி விக்கலுக்கு, உஷ்ண ரோகம், செவிநொய் முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3230 சுவடி எண் : 1629-c

அகத்தியர் பரிபாஷை மூன்றாங் காண்டம்

ஏடுகள் : 22(56-77) கி. எண்ணிக்கை : 1000 அளவு : 37 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவர்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுள்ளது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

வித்தை முறை யாரம்பம்
சத்திசாலம்

இந்திரவி மதிசோம நிகமே வாய்வு
யேதுமில்லை யீசனடி யென்றே போற்றி
மந்திரமுங் கருவிடைய மான வாறும்
மகத்தான ஞானவளி வடிவே மூலம்

முடிவு :

காரு சாலனூல் மூணு காண்டமுந்
தேரு வீதியாந் தேறு தேறுநீ
போரு வீரமே பூமி நாதமே
மேரு மேரடா காண்ட முத்துமே! — 200

மூன்றாங் காண்டம் முற்றும்
ஆக காண்டம் மூணுக்கும் விருத்தம் — 600
சுப்பிரமணியர் துணையுண்டாகவும்

குறிப்பு :

இதில், காமரூபிவித்தை, கண்கட்டு, அண்டில் வித்தை தம்பனம், பொரி வித்தை, நீர்பால் செய்ய, ஆந்தை கூகைவித்தை, காரண்ட வித்தை மை,மைகளுக்கு மந்திரம் முதலான பலதலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3231 சுவடி எண் ; 1629-d

அகத்தியர் பரிபர்ஷை நாலாங்காண்டம்

ஏடுகள் : 20 (78-97) கி. எண்ணிக்கை : 50 அளவு : 37 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சாலனூல் மோடிவித்தை சத்திசாலம்
குருவாடை

காண்டமோடி கணபதி மோடியேர்
மீண்ட மோடியை யிந்திர சாலம்
தாண்ட மோடி யறுபத்து நாலையும்
வேண்ட வேண்ட வினாயகன் காப்பதே ! — 1

முடிவு :

சண்ணவே வெகுகோடி வகைத் தொழிற்
பண்ணியே வெள்ளேறு பலித்திடு
மண்ணை லாரடி யோரிரு நூறையுங்
கண்ணை தாமென வொக்குமுற்றறே! — 200

நாலாங்காண்ட முற்றும்.
ஆக காண்டம் நாலுக்கும் விருத்தம் — 800
சிவசுபிரமணியக் கடவுள் துணையுண்டாகவும்

குறிப்பு ;

இதில், மோகினி பொடி, மை, மோடி, மூல மோடி வித்தை, செயமோடி, மாயாரூபி, ஆகிருஷணி, மீதொழில், அமரி அளாக்க, வுலக்கை குத்த, முரம்புடைக்க ஆகிய தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3232 சுவடி எண் : 1629-e

அகத்தியர் பரிபாஷை ஐந்தாங்காண்டம்_200

ஏடுகள் : 30(98-127) கி. எண்ணிக்கை : 1500 அளவு : 37 × 3 செ.மீ
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள்: மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம்

மகா வித்தை முறை சத்திசாலம்
தேவிசகாயம்

கருவான வாரணத்தின் முகவன் பாதங்
கருணைபுரி சிவன் பாத முமையாள் பாதங்
குருவான குமரகுரு பரன்றன் பாதங்
கும்பசோரி யெனையீன்ற சத்தி பாதம்

முடிவு:

திட்டலிட்ட சென்னியிலே புத்து மேவுஞ்
சித்தருன்னைச் சவிப்பார்கள் திட்டு வார்கள்
கேட்டபுத்தி நினையாதே பலியா தப்பா
கேசரியஞ் சாங்காண்டங் கிடைத்த முற்றே ! — 200
அஞ்சாங்காண்டம் முற்றும்

ஆக காண்டம் அஞ்சுக்கு விருத்தம் 1000 - ம் முற்றிற்று
சிவசுத கணபதி திருவடிகளே சரணம்
முருகக் கடவுள் துணை.

குறிப்பு:

இதில், மகாமந்திரம், திருமால் மந்திரம், மகாமை, பணமழைப்புவித்தை, விலை பாவை, அஞ்சிராணி பொடி, பிண்டத்திராவகம், பூதம்வணங்க, அரசப்பன் வித்தை முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3233 சுவடி எண் : 1629-f

அகத்தியர் பரிபாஷை ஆறாங்காண்டம் — 200

ஏடுகள் : 33 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 37×3 செ. மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

செகசாலம் அகத்தியர் சொன்ன சத்திசாலம்
தேவிசகாயம்

கிடைத்சிவன் பேரைவைத்து ஆறாங் காண்டங்
கேசரியின் மனோன்மணியைப் பணிந்து போற்றி
படைத்தபொரு ளறியாத மனத்தோர்க் கெல்லாம்
பளிங்குதிறம் போலிருந்த சற்குருவின் பாதம்.

முடிவு :

தள்ளிவிட்டுச் சாலநூ லீய்ந்தா லுன்றன்
தலைவெடிக்குஞ் சொல்லிவிட்டேன் சத்தி சாலம்
என்னவென்று நினையாதே இந்திர ஜால
மெடுத்ததுரை யாயிரத்தி யிரநூர் முற்றே ! — 200

முற்றும்

ஆக காண்டம் ஆறுக்குத் திருவிருத்தம் — 1200

அகத்திய ரருளிச் செய்த சத்திசாலம் முற்றும்

காலம் :

கலியுகாதி வருஷம் 4969, சாலிவாகன வருஷம் 1790, யிங்கிலிசு வருஷம் 1868, பசலி வருஷம் 1277,க் பிரபவாதி வருஷம் பிரபவ வருஷம் மாசி மாதம் 5-ந் தேதி சனிவாரம் யெழுதி நிறைவேறினது முருகக்கடவுள் துணையுண்டாகவும்.

முத்தைய செட்டி கையெழுத்து

குறிப்பு :

இதில், வைத்தியக்குரு, குறளிவித்தை, ஆடைதூக்க, ஆள்மறியல், களச்சி வித்தை, நீரடைக்க, மீன் பருக்க, செப்படுவித்தை தீய்ப்பொடி, மண்டூ கமை, பச் சோந்தி வித்தை பூனை கண்மணி முதலான பல அரிய தலைப்புகள் உள்ளன. இடையிடையே விடுபட்ட பாடல்கள் வேறு ஏடுகளில் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன.

வரிசை எண்: 3234 சுவடி எண் : 1630-a

போகர் எழுநூற்றுத் திரட்டு

ஏடுகள் : 115 கி. எண்ணிக்கை : 5000 அளவு : 37×3 செ மீ

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : போகநாயனார் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

காலம் ;

விரோதி வருஷம் தை மாதம் ஆரம்பம். குரோதன வருஷம் மாசிமாதம் 29-ந் தேதி எழுதி முடிந்தது.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 305/D-548 போன்றது. பாடவேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன,

முதலேட்டில் தன்மந்திரியார் அருளிச் செய்த சிந்தாமணி ஆயுர்வேதம் என்றுளது. அடுத்து : போகர் எழுநூறுத் திரட்டுக்குக் காப்பு:

போகனாதர் நூலிலே பொய்யொன் றில்லை
போகனூ லறிந்தவன் போகபூமி ஆளுவான்

போகனூ லறிந்தவன் பொன்னுவெள்ளி கைவசம்
போகர்போற வீதியில் பூனைவேத மோதுமே! என்றுளது, கடைசியில் ஒரு ஏடு மருத்துவம் முதலியன கொண்டுளது.

வரிசை எண் : 3235 சுவடி எண் : 1630-b

யூகிமுனி சிந்தாமணி ஆயுர்வேதம் – 1000

ஏடுகள் : 76 கி. எண்ணிக்கை : 6000 அளவு : 37×3 செ.மீ.
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : யூகிமுனி பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

குறிப்பு :

இதில், 419 பாடல்களுடன் சேத்துமம் முற்றும் ; என்றுளது இதில், வாத பித்தவாத, சேத்தும, பித்த சேத்தும நடைகள், சன்னி சுகசன்னி முதலான தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3236 சுவடி எண் : 1630-c

திருமூலர் நாடி-120

ஏடுகள் : 15 கி. எண்ணிக்கை : 700 அளவு : 37×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : திருமூலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

அந்தி நிறத்தனை யானை முகத்தனை
யிந்து யிளம்பிறை போலு மெயிற்றினை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தனை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

தேவிதுதி

தாதாவைப் போல தயவு கொடுப்பவள்
வேதாக மத்தின் மெய்ஞ்ஞான பெய்ப்பொருள்
ஆதார சத்தி அரிய மனோன்மணி
மாதாவின் பாதம் வைத்தேனென் சென்னியில்

முடிவு :

திண்டிட நோயெல்லாம் திசைகெட்டு ஓடிடும்
பண்டிட வாய்வு பக்கத்திற் சேராது
தண்டிட லோகற்கு தானாகச் செய்முறை
மண்டிய சித்தர் மகாவியாதி போக்குமே. —124

முற்றும்
நந்தீசர் துணையாகவும்
திருமூலநாயனாரருளிச் செய்த திருமந்திரம் னாடி 120 முடிந்தது

காலம் :

ரக்தாட்சி வருஷம் கார்த்திகை மாதம்

குறிப்பு :

இதில், தத்துவம் முத்தும், நாடி விபரம், மரணக்குறி, மேகவிபரம், சூத சன்னி, மூலம் முதலான தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3237 சுவடி எண் : 1630-4

அகக்தியர் ரெத்தினச் சுருக்கம் நாடி-31

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 200 அளவு : 37×3 செ.மீ

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம :

பூரண மாநிறைந்த கும்பபரை தாள்போற்றி
புகலுகிறேன் வைத்திய ரெத்தினச் சுருக்கந் தன்னை
× × × × × × ×
கரிமுக னடியை வாழ்த்திக் கைதனில் நாடி பார்க்கில்
பெருவிர லங்குலத்திற் பிடித்துடன் நடுவே தொட்டால்.

முடிவு :

தானென உலகுக் குள்ளே
தயங்கிய நாடி பார்க்கில்
வானெனு மின்னே கேளா
வருபலன் சொல்லக் கேளு

னானென புருஷர்க் கெல்லாம்
நாடிதான் வலக்கை யாகுந்
தேனென மடவார்க் கெல்லாந்
திடம்பெற யிடக்கை பாரே! —31
நாடி மும்பத்தி ஒண்ணு முத்தும்
சிவகுருபாதம் துணை.

குறிப்பு:

இதில், நாடி பார்க்கும் விதம், நடக்கும் செயல் முதலானவை கூறப்பட்டுள்ளன இதன், பின்னர் ஒரு ஏடு 'அயல் செம்பு முறை' எழுதப்பெற்றுளது.

—★★—

வரிசை எண் : 3238 சுவடி எண் : 1631-a

தெட்சணாமூர்த்தி – 10

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 50 அளவு : 32×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : தெட்சிணாமூர்த்தி பொருள் :
மருத்துவம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 469-g/D-1050 போன்றது.

இதில், 7 செய்யுட்களே உள்ளன. இதற்கு முன் ஏட்டில், இச்சுவடி 1631-ல் உள்ள நூல்களின் அட்டவணை உள்ளது.

வரிசை எண் : 3239 சுவடி எண்: 1631-b

அகத்தியர் – 5

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 50 அளவு : 32×3 செ மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 807/D-1615 போன்றது.

வரிசை எண் : 3240 சுவடி எண் :1631-c

அகத்தியர் வகார சூத்திரம்—16

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 150 அளவு : 32×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 432-o/D-925 போன்றது.

வரிசை எண் : 3241 சுவடி எண் : 1631-d

அகத்தியர் சூத்திரம் வாதம்—16

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 150 அளவு : 32×3 செ. மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பூரணமாம் புங்கவர்ண்ன் ப்ாதம் போற்றி
புகழ்வென்ற சிவகாமி ஆத்தாள் பாதம்
காரணமா மறிவில்நின்று மனத்தைப் போத்தி
கந்தனுக்கு கருனைபெற சீஷ னாகி —1

முடிவு :

வேறு

பாரிந்த நூலைப் பகர்ந்தா லெழுநர்க்‌ம்
பாரிந்த நூலைப் பண்புதாய்ப் பூசிப்பாய்

பாரிந்த நூலைப் பதினாறு சுருக்கமென்று
பாரிந்த நூலைந் பகரார் பெரியோரே! —17

திருச்சித்தம்பலம் துணை.

குறிப்பு:

இதில், வாதம் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

இது, எமது சுவடி எண் 236-c/D-395 "அகத்தியர் முப்பு பதினாறு" போன்றது.

வரிசை எண் : 3242 சுவடி எண் : 1631-e

அகத்தியர் சூத்திரம் — 30

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 200 அளவு : 32×3 செ. மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 321-b/D-604 'அகத்தியர் கைபாகம் முப்பது' போன்றது.

வரிசை எண் : 3243 சுவடி எண் : 1631-f

அகத்தியர் மதிவெண்பா — 100

ஏடுகள் : 11 கி. எண்ணிக்கை : 500 அளவு : 32×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 432-a/D-911, 445-a/D-968 போன்றது.

வரிசை எண் : 3244 சுவடி எண் : 1631-g

அகத்தியர் வைத்தியம் பின் நீடு — 30

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 300 அளவு : 32×3செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பொதிகை தனில் நான்வந் திருக்கும் போது
புகழ்பெறவே பாடினனூல் வாதத்தி லெட்சம்
அதீதமாய் வைத்தியத்தி லிரண்டு லெட்சம்
மாந்திரிக வாதத்தில் ஐயா யிரமுமாம்.

முடிவு :

நலித்துமனம் நோகாமல் நல்லமருந் தெல்லாம்
நாடியவர் கிட்டிருந்து நன்றாய் வைத்துக்கொண்டால்
பொலித்துவுள் மருந்துகளும் பொருள்களுமோ வருகும்
பூலோக மெல்லாமுன்னைப் புகழ்வார் நாலுமுத்தே! — 31
முருகன் துணையுண்டாகவும்

குறிப்பு:

இதில், தீராதநோய்களுக்கு, நவனீத குடோரி செந்தூரம் மேகத்துக்கு சூரணம் நாகம், கரிவங்க, வென்வங்கரசம், செந்தூரம் ஆகிய தலைப்புகள் உள்ளன.

★★★★

வரிசை எண் : 3245 சுவடி எண் : 1631-h

அகத்தியர் பரிபாஷை முதற்காண்டம் — 101

ஏடுகள் : 23 கி. எண்ணிக்கை : 700 அளவு : 32×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுள்து எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 445-e/D.970 போன்றது.

இதில், முழுதும் இருக்கிறது. அது குறைபாடுடையது.

வரிசை எண் : 3246 சுவடி எண் : 1631-i

அகத்தியர் பரிபாஷை 2-வது காண்டம்

ஏடுகள் : 21 கி. எண்ணிக்கை : 600 அளவு : 32×3 செ.மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு:

இது, எமது சுவடி எண் 445-d/D-971 போன்றது பாடவேறுபாடுகள் காணப்படுகின்றன.

வரிசை எண் : 3247 சுவடி எண் : 1631-j

அகத்தியர் பரிபாஷை மூன்றாங் காண்டம்

ஏடுகள் : 20 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 32×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 445-e/D-972 போன்றது. பாடவேறுபாடுகள் காணப்படுகின்றன.

★——★

வரிசை எண்: 3248 சுவடி எண்: 1631-k

அகத்தியர் பரிபாஷை 4-வது காண்டம்

ஏடுகள் : 19 கி. எண்ணிக்கை : 1000 அளவு: 32×3 சென்டி மீட்டர்

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 445-f/D-973 போன்றது. பாடவேறுபாடுகள் உள்ளன.

வரிசை எண் : 3249 சுவடி எண் : 1631-l

அகத்தியர் பரிபாஷை 5-வது காண்டம்

ஏடுகள் : 20 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 32×3 செ.மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

காலம் ;

பிறபவ வருஷம் சித்திரை மாதம் 15-ஆம் தேதி வெள்ளிக்கிழமை எழுதி முடிந்தது இப்படிக்கி அப்பர் சாமிகள் அடிமை வைத்திய முத்தைய செட்டி கை எழுத்து.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 445-g/D 974 போன்றது. பாடவேறுபாடுகள் காணப்படுகின்றன.

வரிசை எண் : 3250 சுவடி எண் : 1631-m

ரோமரிஷி வகாரம் — 100

ஏடுகள் : 20 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 32×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : ரோமரிஷி பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

காலம் :

பிறபவ வருஷம் சித்திரை மாதம் 20-ஆம் தேதி வியாழக்கிழமை எழுதி முடிந்தது.

சிவசுப்பிரமணியக் கடவுள் துணையுண்டாகவும்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 671-a/D-1307 'ரோமரிஷி சூத்திரம்—100' போன்றது பாடவேறு பாடுகள் மிகுந்து காணப்படுகின்றன.

வரிசை எண் : 3251 சுவடி எண் : 1631-n

அகத்தியர்-நிகண்டு குருநூல் —116

ஏடுகள் : 22 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 25×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஆதியாம் பராபரமே குருவே அய்யா
வகண்டசரா சரமான நிர்குணமே சோதி
பேதியா நின்மலமே சூட்சா சூட்சம்
பெரிதான கணபதியும் வல்லபையுங் காப்பு

முடிவு :

சொன்னவகையிதுக்குள்ளே நன்றாய்ப் பாரு
சொரூபமென்ற தீபவொளி நன்றாய்க் காணும்
யென்னவென்று சொல்லுவேன் யென்குருவே
சுப்பிரமணியம் இயவான் நூத்திப்பதினாறும் முற்றே — 116
சுப்பிரமணியர் துணையுண்டாகவும்.

காலம் :

பிறபவ வருஷம் சித்திரை மாதம் 25-ஆம் தேதி திங்கட்கிழமை ரோகிணி நட்சத்திரம் எழுதிமுடிந்தது.

முற்றும்.

குறிப்பு :

இதில், செம்பு பற்பம் வங்க பற்பம், பாம்புகடிக்கு மருந்து, அகார உகார கல்பம், கெந்தக வெண்ணை, பவளம் நீர்க்க முதலான தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3252 சுவடிஎண் : 1631-ம

அகத்தியர்ஞான காவியம் 1000-க்குச் சுருக்கம் - 100

ஏடுகள் : 22 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 32×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள்: மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சிந்தையுறு ஞானந் தெளியயுரைப் பாருக்கு
× × × ×
தேவியெனும் பூரணியே சீர்.

நூல்

பூரணமாய் மும்மூர்த்தி வந்த வாறும்
பூமியென்றுந் திகிரியென்றும் படைத்தவாறும்
காரணமாய்த் தேவியெங்கும் நிறைந்த வாறும்
கர்ப்பமுண்டு ரிஷிகள் சித்த ரான வாறும்

முடிவு :

வீறான தத்துவந்தான் மூன்று ஞூத்தின்
மெய்நிறைந்த கோணலெல்லாம் விரும்பி னேன்யான்
பேறாள தத்துவந்தான் தேர்ந்து பாரு
பேசாத தத்துவத்தை வெளிவிட்டேனே! —100

சிவமயம்
சுப்பிரமணியக் கடவுள் துணை

குறிப்பு :

இது, எமது சுவடி எண். 434-e/D-936 'அகத்தியர் ஞானநூல்' போன்றது அதில் 50 செய்யுட்களே இருக்கின்றன. 50-வது செய்யுள் இதனுடன் ஒப்புமையுள்ளது. மேலும் சுவடி எண் 703/D-1401 'அகத்தியர் ஞானம் நூறு போன்றும் உளது.

வரிசை எண் : 3253

சுவடி எண் : 1631-p

சட்டமுனி நாயனார் சூத்திரம் — 8

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 80 அளவு : 32×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : சட்டைமுனியார் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 819-b/D-1628 போன்றது.

வரிசை எண் : 3254

சுவடி எண் : 1631-q

பலதிரட்டு சூத்திரம் — 8

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 80 அளவு : 32×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : தெட்சிணாமூர்த்தி பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 819-a/D-1627 போன்றது

வரிசை எண் : 3255

சுவடி எண் : 1631-r

கவுபாலசித்தர் ஆணிக்கோர்வை — 50

ஏடுகள் : 13 கி. எண்ணிக்கை : 400 அளவு : 32×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : கவுபாலசித்தர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 894/D-1838 போன்றது. இதில் 54 செய்யுட்கள் உள்ளன.

வரிசை எண் : 3256 சுவடி எண் : 1632-a

தன்வந்திரி வைத்தியம் — 208

ஏடுகள் : 53 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 34×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : தன்வந்திரி பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

காலம் :

குருவே துணை, இப்படிக்கு சுப்பராய செட்டியார். ஸ்ரீ ராம ஜெயம்.

சித்ரபானு வருஷம் கார்த்திகை மாதம் 12-ந் தேதி திங்கட்கிழமை, பனிரெண்டு மணிக்கிமேல் அசுவணி நட்சத்திரத்தில் எழுதி முடிந்தது முத்தும். இப்படிக்கு நந்தீசர் அருளினாலே தன்மந்திரி கருக்கிடை யெழுதி முடிந்தது முற்றும். ஆண்டியப்பன் கெந்தவடி அருளான மெத்தையிலே நிகண்டுக்கொள்ள வேண்டியது. இப்படிக்கு சுப்பராயன் சுவடி.

யாரெடுத்தும் படித்துக் குடுக்கவும்
சிவசுப்பிரமணியர் துணையாகவும்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 235-b/D-389 தன்வந்தரி வைத்யம் இருநூறு' எண் 563-b/D-1171 தன்வந்திரி கருக்கிடை சூத்திரம்-200 போன்றது. இதில் 208 செய்யுட்கள் முழுமையாக உள்ளன.

★ ★ ★

வரிசை எண் : 3257 சுவடி எண் ; 1632-b

தன்வந்திரி செயநீர் — 50

ஏடுகள் : 13 கி. எண்ணிக்கை : 300 அளவு : 34×3 செ.மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : தன்வந்திரி பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சுப்பிரமணியர் துணையுண்டாகவுல்
குருவே துணையுண்டாகவும்

ஆதியெனும் சின்மயத்தின் அருளே போற்றி
அகண்டபரி பூரணமாங் குருவே போற்றி
நீதிசற வாணிகுரு அம்பாள் போற்றி
நிலைத்ததொரு வாரணத்தின் விசுவன் போற்றி

முடிவு :

னாச்சென்ற நல்மையது மனத்தா லெண்ணு
நலமான சிவபதத்தில் லமந்து நில்லு
காச்சென்ற யின்னூல் அரையில் வைத்து
கண்மணியே தொழுது நித்தம் போத்து முற்றே ! —50

குருசாமி முன்னிற்கவும்.

யென்னாண்டவன் சிவசுப்பிரமணிய சுவாமி துணையாகவும்
அவர்பாதமே நான் கெதியென்று நம்பினேன். சிவமயம்
தற்மந்திரி செயநீர்—50 எழுதி முடிந்துது. முத்தும்.
யிப்படிக்கி சுப்பராயன் அபிராமித்தாயோடச் சிவமயம்
அண்ணாமலை உண்ணாமுலை என்றால் வினையறுமே
சகலமான பேருக்கும் அடியேன் சரணம்.
இப்படிக்கு—50

குறிப்பு :

இதில், பலவிதமான மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3258 சுவடி எண் : 1632-c

தன்வந்திரி தெண்டகம் சொச்சம் — 40

ஏடுகள் : 12 கி. எண்ணிக்கை : 250 அளவு : 34×3 செ.மீ
பக்கத்திற்கு : 5—6 வரிகள் ஆசிரியர் : தன்வந்திரி பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

நன்றாக குருவே துணை. சுப்பிரமணியர் துணை
அஞ்சனம்

முத்துமே கருவெல்லாம் யினிமேல் சொல்வேன்
முடிந்ததொரு தெண்டகத்தின் வரலா றெல்லாம்
அத்துமே நூறுக்குள் வாத ஞானம்
அப்பனே யினிமேலே அதற்ணாங் கேளு

முடிவு :

மன்னோமே யிந்நூலைப் பாத்தோ ருக்கு
மகத்தான குருடனுக்கும் வெளிச்சம் போலாம்
அன்னோமே தெண்டகத்தை யறையில் வைத்து
அனுதினமும் பூசித்து அடிபணிந்து தாள்தொழுந்தேன்-

ஆக பாடல் 140. முன் பாடல் 100 சொச்சம் 40. ஆக தெண்டகம் பாடல் முஸ்த்தும் 140. யெழுதி முடிந்தது முற்றும்.

காலம் :

விசைய வருஷம் அற்பிசி மாதம் 22-ந் தேதி மங்களவாரம் காலமேயது அறிய வேண்டியது ; ணபத்து நாழிகையில் நல்ல சுபதினத்தில் யெழுதி முடிந்தது முற்றும். இத்தப்படிக்கி சுப்பராயன் கையெழுந்து, பெருமான்பிள்ளை பொஸ்த்தகம் யாருக்கும் குடுக்கக்கூடாது.

குறிப்பு.

இதில், ஸ்ரீ வசியம், ராசவசியம், உத்திரத்தில் தன்மந்திரியைக் காண, மூடர் செய்பகை, வாடை, யீடு சந்நிக்கு மாத்திரை, வயித்தியர் நெறி முதலான தலைப்புகள் உள்ளன

வரிசை எண் : 3259 சுவடி எண் : 1632-d

கருவூரார் வைத்திய நொண்டி — 300

எடுகள் : 23 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 34 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : கருவூரார் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஸ்ரீராமசெயம் தேவி சகாயம்

சீருலவு கற்பமுறை போதமிறுஞ்
சொல்வற்கத்திற் போக நாதர்
தாருலவு திருமூலர் சட்டைநாதர்
தமையனெனுங் கொங்கணவர்

முடிவு :

மந்தையில் காட்டெருவைப் பொருக்கி
முரித்துவைத்து ரெண்டு முழப் பொடம்
போட்டு நன்றாக நீரியபின் மறுநாள்ப்புடம்
பெறக்க அந்த மண்டையும் வெந்து தலை
மூன்று உப்பெண்ண ....

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 322-c/D-616 போன்றதெனினும் அதைவிட காப்புச் செய்யுள் 4 மிகுதியாயுள்ளன.

மேலும், சுவடி எண் 499/D 1095 போன்றது.

வரிசை எண் : 3260 சுவடி எண் : 1632-e

(கருவூரார் நொண்டி) சிந்து

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 100 அளவு : 34 × 3 செ.மீ
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : கருவூரார் பொருள்: மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

பாட்டு சிந்து கெந்தகத் தயிலம்

அந்தமுள்ள கெந்தகத் தயில மண்ணே
யரையுரன் திருமூலர் கொங்கணரு மெச்ச
கெந்தியோர் மாசில்லாமல் கொடியாகப் பல மைந்து
கலுவத்தி லிட்டு சாரமொடு வீரமிரு காசு

முடிவு :

எண்ணெயைத் தேய்த்து வெந்நீரில் முழுகு
இத்தனையும் தீரும்மென்று செப்பினார்
சற்குரு அரன்பாதம் போற்றி
தனத்தோம் தனதனத்தோம்

குறிப்பு :

இதில், கெந்தகத்தயிலம், சித்திரவல்லாதி ஆகிய மருந்துகள் நொண்டிச்சிந்து பாடல் வடிவில் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3261 சுவடி எண் : 1633

தெட்சணாமூர்த்தி மெய்ஞ்ஞானம் 1500

ஏடுகள் : 280 கி. எண்ணிக்கை : 10000 அளவு : 32×3 செ.மீ
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : தெட்சணாமூர்த்தி பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக

சீரண முடைய களை
சிவன்மகன் தமிழி நானை
வாரணி முலையாள் பெற்ற
மதகரி வ ......— .. றிந்த
நாரண மருகன் செஞ்சொல்
நற்றமிழ்க் குடையோன் பூசை

முடிவு :

வாழியா மண்டரண்ட புவனம் வாழி
மாநிலத்தில் சீவசெந்து வொடும் வாழி
காளியாம் வனதுற்கை யெல்லாம் வாழி
கடல்வாழி மலைவாழி கருஷம் வாழி
மாநிலத்தில் சீவசெந்து வோடும் வாழி
ஆதியாம் சித்தர்க ளெல்லாம் வாழி
அசுராதி தேவாதி வாழி முற்றே ! — 1481

குறிப்பு:

இதில், நவக்கரகம் நிறுத்த, கிரிகை பூசை, கல்பம், லேகியம், நாடிப்பரீட்சை, சேட்டுமம், சரக்கின் குணம், மூலிகைக் குணம், அகத்தியராட்சரம், உண்ணுங்கல்பம், பொதிகை விபரம், எழுத்தாணியளவு கைவிடாமலுபதேசம், சமாதி முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3262

சுவடி எண் : 1624-a

அகத்தியர் கர்மகாண்டம் — 300

ஏடுகள் : 62 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 35×3 செ.மீ
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது. எழுத்து : தமிழ்.

காலம் :

சுக்கில வருஷம் கார்த்திகை மாதம் 11-ந் தேதி புதவாரம் பூச நட்சத்திரம் யெழுதி முடிந்தது.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 560/D-1167 'அகத்தியர் நடுக்காண்டம்' கர்மநிவர்த்தி-300' போன்றது.

மேலும், சுவடி எண் 695-b/-D1368 அகத்தியர் நடுக்காண்டம் 300 ல் கர்மநிவர்த்தி போன்றது.

இச்சுவடியின் தொடக்கத்தில், இச்சுவடியில் உள்ள நூல்களின் பட்டியலும், 5 சக்கரங்களும் உள்ளன,

வரிசை எண் : 3263

சுவடி எண் : 1634-b

புலத்தீசர் — 300

ஏடுகள் : 56 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 35×3 செ.மீ
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : புலத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்லநிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஆதியந்தம் நிறைந்ததொரு சோதி பாதம்
அன்பான ரிஷிகளுட பாதம் போற்றி
நீதியா யெனையாண்ட அகத்தீசர் பாதம்
நினைத்துருகி யோற்றிசெய்து நேர்மை யாக

முடிவு :

சாமேதான் சாத்திரமுஞ் சூத்திரமும் பாரு
சரியாக பசகளுக்கும் தோணும் தோணும்
நாமேதான் உலகறிய சொல்லிப் போட்டோம்
நன்மைதரும் முன்னூறும் நயமா முத்தே ! — 301

புலத்தியர் அருளிச் செய்த — முன்னூறு முற்றும்
முருகக் கடவுள் துணை.

காலம் :

சுக்கில வருஷம் மார்கழி மாதம் 29-ந் தேதி செவ்வாய்க் கிழமை எழுதி முகிந்தது.

குறிப்பு :

இதில், வாலை ரசம், புகை நீறு, சண்ட ரசபற்பம். வாலைரசம் மெழுகு, உப்புக்கட்டு, கெந்தகத் தயிலம், துரிசி செம்பு, அயகளங்கு நாகரச கெந்தி, தயிலம், வங்க செந்தூரம், சாதிக்காய் லேகியம் முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3264 சுவடி எண்: 1634-c

அகத்தியர் கன்ம சூத்திரம் — 300

ஏடுகள் : 59 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 35×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்லநிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

காலம் :

சுக்கில வருஷம் தைமாதம் 25-ந் தேதி சனிவாரம் எழுதி முடிந்தது.

குறிப்பு :

இது எமது சுவடி எண் 793-a/D-1598 போன்றது.

வரிசை எண் : 3265 சுவடி எண் : 1634-d

இராமதேவர் பட்சணி — 109

ஏடுகள் : 23 கி. எண்ணிக்கை : 750 அளவு : 35×3 செ மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : இராமதேவர் பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்லநிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

காலம் :

இதில், தொடக்கம் 9 பாடல்கள் இல்லை.

இதில், கடைச்சரக்கு வெந்தயம், சீரகம், சதகுப்பை முதலான எல்லா சரக்குகளின் குணங்கள் கூறப்படுகின்றன.

வரிசை எண்: 3397 சுவடி எண்: 1675-i

சட்டைமுனியார் நிகண்டு

ஏடுகள்: 6 கி. எண்ணிக்கை: 200 அளவு : 38 × 3 செ மீ.

பக்கத்திற்கு: 7 வரிகள் ஆசிரியர் : சட்டைமுனியார் பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை: முற்றுமுளது எழுத்து : தமிழ்

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 675-b/D-1318 சட்டைமுனி ஐயா நிகண்டு போன்றது.

வரிசை எண் : 3398 சுவடி எண் : 1675-j

சுந்தரமூர்த்தி வாதநூல்

ஏடுகள் : 20 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 38 × 3 செ.மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : சுந்தரமூர்த்தி பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 342-b/D-669 சுந்தரானந்தர் பாடல் சூத்திரம் போன்றது. 105 செய்யுட்களே உள்ளன.

வரிசை எண் : 3399 சுவடி எண் : 1675-k

சவுக்காரவைப்பு முறை

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 120 அளவு : 38 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நல்லப்பா சவுக்காரம் செய்யும் மார்க்கம்
    நிலைபெறவே சொல்லுகிறேன் மைந்தா கேளு
வல்லதொரு குளங்கரைகள் பிண்டத் தானை
    மகத்தான சிப்பியிட கும்பிட்டானை
× × × × ×
சொல்லாமற் சொல்லுகிறோம் ஆதியந்தம்
    சுருபமுள்ள வஸ்துவை நீ வணங்கிப் போத்தே ! —163

முடிவு :

பசியான தீபனங்கள் யில்லை மைந்தா
பரபரத்தின் கிருபையினால் பூரணத்தைப் பாரே ! —182
பூரணமா யின்னமொரு ....

குறிப்பு :

இதில் தொடக்கமும் இல்லை; முடிவும் இல்லை அதனால் நூற்பெயர் தெரியவில்லை. வெண்சாலை கற்பம் என்ற தலைப்பும் காணப்படுகிறது.

வரிசை எண் : 3400 சுவடி எண் : 1675-l

அகத்தியர் குழம்பு

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 250 அளவு : 38 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள்: மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 591/D-1212, எண் 595/D-1213 எண் 1673-a போன்றது.

வரிசை எண் : 3401 சுவடி எண் : 1675-m

அகத்தியர் கருமசூத்திரம்

ஏடுகள் : 60 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 38×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு ;

இது, எமது சுவடி எண் 592/D-1210 போன்றது. மேலும் சுவடி எண் 1674-g அகத்தியர் கர்மகாண்டம் 300 போன்றது.

வரிசை எண் : 3402 சுவடி எண் 675-n

அகத்தியர் பாலவாகடம்

ஏடுகள் : 10 கி. எண்ணிக்கை : 500 அளவு : 38×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

குறிகுணம் அறிவது

புரணமா குருவாகத் தன்னைப் போற்றி
போதரவாய் மரிவுடனே மிகுத்துப் பாரு
காரணமே வாய்வினுனி ரசங்களாகி
கனமான ரசங்கதான் சுரோணிதங்களாகி

முடிவு :

சொல்லிடு ஆலின் புல்லுரி மாஞ்சி சொன்னவகை
மெல்ல அளவு யிரண்டு பனைவிடை விதிற்கலந்து
துள்ள வெரித்துப் பதமாய்க் குளவிக்கித் துட்டளவு
உள்ளபடியிடக் கணைங்களும் காச்சலு மோடிடுமே! —8
ஆக பாடல் 166

குறிப்பு :

இதில், சலமாந்தை, சுளி மாந்தம், மாந்தை, மரக்கணை, பால வாகடம்-பிள்ளைகளுக்கு, கழிகணம், வறக்கணம், கரப்பன்-கிரந்தி, காச்சல், வறக்கணம், கணமாந்தம், உடல்வத்துவதற்கு, தோஷப்பிணி, மாந்தக்கணம், சுரகண மாந்தம் முதலான தலைப்புகள் உள்ளன.

முதலில் 22 பாடல்களும், பிறகு வேறு நூலிருந்து தொடர்ந்த பாடல்களும் உள்ளன.

வரிசை எண் : 3403 சுவடி எண் : 1676-a

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 40 அளவு : 30×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

...... ரக் கொண்டேன். தண்ணீரைக்
கெங்கா பரமேசுவரியாகக் கொண்டேன்
தண்ணீர் சொரிஞ்சு . கொள்ளுகிறவரை
பரமேசுபரனாகக் கொண்டேன்

முடிவு :

சமன்முளகு பொடிசெய்து வென்னீரில்
வெறுகடி பிரமாணங் கொள்ளவும்
சகல மூலமும் தீரும்.

குறிப்பு :

இது, வேறு வேறு நூல்களின் உதிரி ஏடுகள்.

வரிசை எண் : 3404 சுவடி எண் : 1676-b

அகத்தியர் நாடி சூத்திரம்

ஏடுகள் : 43 கி. எண்ணிக்கை : 1200 அளவு : 30×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

சீர்கொண்ட வயித்திய நாதர்த்
திருவுளஞ் சிறந்து நண்பால்
பார்கொண்ட நோயோர் தம்மை
பார்க்கிற வகையோ டெட்டாம்
வேர்கொண்ட நாடி பார்த்து
மெய்யினைத் தொட்டுப் பார்த்து
யேர்கொண்ட ரூபம் பார்த்து
யியல்மொழி பார்ப்பன் மாதே ! —1

முடிவு :

சுவறுதான் பிடித்துக் கொண்டளைத்தால்ச்
சொல்லப் போகாது அசாத்தியந்தான்
விபாந்தப் பிப்பயப்படினும் மிகுந்ததே !
கொட்டாவி நெட்டுயிர்ப்பு........... —20

குறிப்பு :

இதில், பட்சவாத சன்னி பிளையாக்குறி, பித்த சன்னி பிளைப்புக் குறி, நீரில் பார்க்கிற குறி, மூன்று நாடி நிதானம், சன்னி நிலையறியும்படி, சன்னி 13-க்கு குணம், சன்னி பிரமாணம், சாத்தியம், அசாத்தியம், சவ சன்னிக் குணம், சேற்றும சன்னி முதலான தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3405 சுவடி எண்: 1676-c

திருமூலர் அன்னூற்றிரட்டு வயித்தியம் – நாடி

ஏடுகள் : 17 கி. எண்ணிக்கை : 400 அளவு : 30×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : திருமூலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

குறிப்பு ;

இது, எமது சுவடி எண் 1667-b போன்றது.

★★★

வரிசை எண் : 3406 சுவடி எண் : 1676-d

பண்டிதர் நடக்கின்ற செய்கை

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 50 அளவு : 30 × 3 செ. மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பண்டிதனும் பரியாரி வைத்திய னென்றும்
பகருகின்ற மொழியெல்லாம் பாறுக் காகுங்
கண்டிதமாய் முகம்பாத்து நோயைப் பார்த்து
காத்தெழுந்த நாடியுட கலக்கம் பார்த்து
முண்டிதமாய் மூன்று முளநல் தாது பார்த்து
முளைகன்றும் மருந்தினுட முடுக்கும் பார்த்து
அண்டியபின் பொருளாசை மிகுந்தி டாமல்
அறிந்து செய்வோன் ஏழுபிறப்பு மயனாம் பாரே ! —1

முடிவு :

மானென்ற மாய்கையிலே மனம் நாணாமல்
வளந்திருப்பார் பெரியோர்கள் வைத்தியர்கள் பாரே ! —8

பாரப்பா சூத சுத்திமுன் னிருபத் தஞ்சு
பாங்கானால் வாலை ரசம் மாகுமா............

குறிப்பு :

இதில் மருத்துவர்களின் பெயர், இருக்க வேண்டிய குணம், செய்ய வேண்டிய செய்கை முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3407 சுவடி எண் : 1676-c

திருமூலர் திருமந்திரம்

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 200 அளவு : 30×3 செ.மீ

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : திருமூலர் பொருள் : வைத்தியம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக குரு வாழ்க

உலக மயக்கம் ஒருவருங் கண்டில்லை
பலகலை சொல்மலை பாவை புதல்வனை
அலைதலைக் கானம் ஆகி அகண்டினை
தலையில்வயித் ததிசியம் சாத்துகின்றேனே ! —1

முடிவு :

கட்டிய வன்றங் கால...... ....
கட்டியே போட்டிடுங் காடைப் புடமொன்று மங்கனே
வாட்டிய போது வடிவு வெளித்திடு............
(கூ)ட்டிய பற்பங் குருபற்ப மாமே ! —50

பற்பங் குருபற்பம் பன்னீர்சூர பற்பங்
............மெனக் கொன்றாலுமங் காயங்கள்
வராகியம்பாள் துணை.

குறிப்பு ;

இதில், மருந்து வகைகளும் செய்முறைகளும் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3408 சுவடி எண் : 1677-a

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 80 அளவு . 26½×3 செ.மீ.

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

கஞ்சாவித்து அதிமதுரம்..........
.... மருளூம வித்து ஆக 24
திருமூல வாயிரத்தில் சொல்லியிருக்குா பாட்டு
ஞான மில்லாதான் நல்வேடம் பூண்டாக்கால்
ஆன குடிகெடும் அரசு நிலைகெடும்
வான மழிந்திடும் வையகம் பஞ்சமாம்
தானுரை வேடந் தவிழ்ப்பது நன்றே !

முடிவு :

வெத்திலைச்சாற் விட்டு நன்னா யரைத்து
அகிலப் பண்ணி அதில் சறக்குப் பொடியும்
ரசத்தையும் விட்டு எரியிட்டு எடுத்து வைத்துக்
கொண்டு குடுக்கவும.

குறிப்பு :

இதில், பஞ்சரச பஷ்பம், குகை, வசியம், உச்சாடணம் முதலியன உள்ளன.

—★★—

வரிசைஎண்: 2409 சுவடி எண் : 1677-b

வாலசீசை வாகடம்

ஏடுகள் : 23 கி. எண்ணிக்கை : 500 அளவு : $26\frac{1}{2} \times 3$ செ மீ
பக்கத்திற்கு : 6—7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வெண்பா

பொறுமுங் கழியும் பூண்டுவலி யுண்டாகு
மறுவுமுலை யுண்ணாது மயங்கி - வெறுவில்
மெய்க்ககந்தச் செய்யும் கனந்தான் மயங்கி
அனன்றுமெத் தவுமாந்த மேல்

முடிவு :

புள்ளையளுக்கு யிந்தப்படி செய்து பத்தியமாய் விசுவாசமாய்
நடந்தால் சொஷ்தம் மனோன்மணியம்பாள் கிறுபை செய்து
காப்பாடுவாள்,

சிவமயம்
குருசுவாமியார் பாதமே கெதி

குறிப்பு :

இதில், குழந்தைகள் மருத்துவம் பேசப்படுகிறது. பாலசிட்சை வாகடம் என்பதனை வாலைசிசை வாகடம் என்று எழுதப்பட்டுளது.

இதில், கணைமாந்தம், பால மாந்தம், நீர்மாந்தம், கட்டுமாந்தம், துலைமாந்த குணம், காரை மாத்திரை, மாந்த உண்டை, மாந்தத்துக்கு எண்ணெய், வாதபித்த சுர குணம், முத்தக் கணத்துக்கு முதலியன உள்ளன.

வரிசை எண் : 3410 சுவடி எண் : 1677-c

வயித்தியம் - பலதிரட்டு

ஏடுகள் : 77 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 26½×3 செ. மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

மூதண்டகிஷாயம்

அறுகம் வேர் மூலத்துக்கு
முளகு நாயுருவி
கூகை நீர் யெருக்கம்வேர் தூள்பண்ணி
மாதளம் பூ யெருமைத் தயிரில் கொள்ளவும்
அதிமதுரம் பேய்க்கும்மட்டிக்காய் ரெட்டித்து
வகைக்கு பச்சைக் கற்பூரம் சேர்த்து
வராகனெடை ½
சூடுதணியும் குணமாம்.

முடிவு :

கருஞ்சீரகம் நமச்சாரம் பொடி செய்து சீலையில் தூவி
திரிச்சு, காயவைத்து, னாசியில் பிடிக்க நிற்கும்
மனோன்மணி தயவு செய்து காப்பாட வேண்டியது
குருசுவாமி யாரட்சிக்கவும்

குறிப்பு :

இதில், பஞ்சரசம் பற்பம், பஞ்சரச மெழுகு, சன்னிமாத்திரை, முசுவாக்கினி லேகியம், தலைவலி மண்டைக்குத்துக்கு எண்ணெய், மேகவகைக்கு கிருதம், அறக் குத்தயிலம், அக்கினி குமாரன் செந்தூர மாத்திரை, கபால சூலைககுத் தயிலம் வாயுவு திரட்சிக்கு சவுக்காரக் குழம்பு, சண்ட மாருதம், செந்தூரம், கக்குவானுக்கும் இருபத்தொரு மேகத்துக்கு எண்ணெய், வண்டுகடி, செய்யான்கடி, வெகுமூத்திரத் துக்கு, ரத்தமூலம், ரத்தபாண்டு, அகத்தியர் கல்பம், கண்ணோவுக்கெல்லாம் பத்து. கெவுரி சிந்தாமணி செந்தூரம் முதலான பல தலைப்புகள் உள்ளன. சிறந்த மருந்து களாக காணப்படுகின்றன.

வரிசை எண் : 3411 சுவடி எண் : 1678

அகத்தியர் செந்தூரம் — 300

ஏடுகள் : 64 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 37 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இதில் 183 செய்யுட்களே உள்ளன. இது, எமது சுவடி எண் 15-a/D-16, எண் 844-c/D-1760 போன்றது. பாடவேறு பாடுகள் மிகுந்து காணப்படுகின்றன.

வரிசை எண் : 3412 சுவடி எண் : 1679

திருமூலர் குணவாகடத் திரட்டு

ஏடுகள் : 30 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 30 × 3 செ மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : திருமூலர் பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம்

அந்தி நிறத்தனை .... போற்றுகின்றேனே

நூல்

தாதாவைப் போலத்தன் னருள்கொடுப்பவன்
வேதாகமத்தின் மெய்ஞ்ஞான மெய்ப்பொருள்
ஆதார சக்தி யான மனோன்மணி
மாதாவின் பாதம் வைத்தேனென் சென்னியில் — 1

முடிவு :

அப்புவுறக்கால் அக்கினிக்கி மார்பு
வாயுவுக்கு கை ஆகாசத்துக்கு தலை
இந்தப்படிக்கு அவரவர் அங்கத்திலே
பஞ்சபூதமா நிற்கும்படி யறியவும்

குறிப்பு :

இதில், வெவ்வேறு உதிரி ஏடுகள் உள்ளன, பக்க எண்கள் தொடர்ச்சி இல்லை. நாள் மூன்றிலும், பதினைந்திலும் சாகும் குறி, ஆறு திங்களிலும் உடனே யுஞ் சாகுங்குறி, அகத்தியர் அருளிச் செய்த வைத்திய சாரம்; மருந்து கொடுக்கக் கூடாத பெர்கள், முன்னே பணம் வாங்கிக் கொண்டு பின்னே வயித்தியம் செய்யவும், துஷ்டர்களுக்கு மூன்று சொல்லக் கூடாது முதலானவை உள்ளன.

இரண்டு வகையான அளவுள்ள சுவடி ஏடுகள் உள்ளன.

★——★

வரிசை எண் : 3413 சுவடி எண் : 1680-a

நாடிப் பரீட்சை

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 50 அளவு : $25 \times 2\frac{1}{2}$ செ.மீ

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

.........லை மருந்தும் பலித்திடாக் கூத்து.........
செலெஷ்ட்டுமக் காயமே - 28

மச்சமுனி துணை

நூல்

வீரியம் நட்டமாகி விகட பார்வையு மூண்டாகிப்
பாரிய கரங்கள் வெளுத்துப் பாகைமயிற் சிகப்புமேறி
நேரிநூல்ப் பித்த சேட்டும நடந்து காட்டிச்
சீரிய வாதசுரமெனில் மாத மொன்றே — 1

முடிவு :

கிட்டு மலத்தை யொன்ப தெனில்
கிளரு மங்கதனை விரைத்தல்
மட்டு ணாகும் மொருபத்தில்
மரண மென வெட ....

குறிப்பு :

இச்சுவடியின் முன் பகுதி 8 ஏடுகள் இல்லை, இப்பகுதியில் முன் தலைப்பின் இறுதிப் பாடல் முடிகிறது நடு ஏட்டில் நாடிப் பரீட்சை தொடங்குகின்றது. இது பிற நாடிப் பரீட்சையின் வேறாயது.

வரிசை எண்: 3414 சுவடி எண் : 1680-b

கமலக்கை மணிக்கடை-கயத்து சூத்திரம்

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 100 அளவு : 25 × 2½ சென்டி மீட்டர்

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க

விமலனை நோக்கியே வேடமா முனிதிமிலமாம்
பிணியது சேரச் செப்பிடமல்க்குருனி
மத்துமுள்ளதே.

முடிவு :

முறையெல்லா மியம்பிய குருமுனி
விந்தை பெறு சாவு வேணரு
ரோக முகம சந்தைய மின்றிய
தமிழுரைத்தி வந்துரை
மாந்தா மானிட ராவரே! —29

மணிக்கடை கயறுத்து
சூத்திரம் முற்றும்
குருமுன்னிற்க வேணும்

குறிப்பு :

இதில், மணிக்கட்டில் கயிறு கட்டி அளவெடுத்து, அந்த அளவிலிருந்து வியாதியைக் கண்டு பிடிக்கும் விதங்கள் கூறப்பட்டுள்ளன.

இது, எமது சுவடி எண் 252-c/D-447 போன்றது.

வரிசை எண் : 3415 சுவடி எண் ; 1680-c

பூத நாடிக் குணம்

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 80 அளவு : 25 × 2½ செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : வால்மீகர் பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

அய்விர லைந்து நாடியது
செய்யும் வகையைக் கேளீர்
மெய்விர லொன்று வாதம்
மேவியொண்டு பித்தம்
செய்விரல் சிலேற்ப மூன்று
சேருனால் பூத னாடி

முடிவு :

விரைந்திடும் பூதனாடி
நெருப்பது போலே சுட்டால்
சிறந்திடும் பில்லி யாகும்
செய்திடும் சூட்சை கேளீர்
குறைந்திடுங் குரங்கு நாயுங்
கூட்டமும் பயமும் காட்டும்
மறந்திடும் பக்கம் செய்யும்
வால்மீக ருரைத்த வாறே! —16

வால்மீகர் துணையாக வேணும்

குறிப்பு :

இதில், முன்கையில் ஓடுகின்ற நாடிகளில் பூத நாடி பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3416 சுவடி எண் : 1680-d

நனை சீலை சூத்திரம்

ஏடுகள் : 1½ கி. எண்ணிக்கை : 30 அளவு : 25 × 2½ செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : வால்மீகர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சீலையை நனைத்து வேத்திற மணிக்கடையில் சுத்திச்
சாலவேமூன்றே முக்கால் நாழிகை கண்டபின்பு
சாறவே சீலை வாங்கித் தனிவிரல் வாத நாடி
கோலமாய் குறித்து வாங்கில் குறைந்திடு மானமென்றே! —1

முடிவு :

முந்தியே நனைத்துச் சீலை முத மணிக்கிடையில் சுத்தி
உந்தியே மூன்றே முக்கால் நாழிகை சென்ற போது
தந்திபோல் வாதனாடி தனியது சுண்டி வாங்கில்
செந்திரு வானே சொனனோம் சீக்கிர மன்று சாவே! —6

நனைசீலை சூத்திர முற்றும்

குறிப்பு :

துணியைத் தண்ணீரில் நனைத்து மணிக்கட்டில் சுற்றி சிறிது நேரம் கழித்து அவிழ்த்துப் பார்க்க, ஏற்படும் நிலை கண்டு நோய்க்குறி தெரிந்து கூறல் ஆகும்.

வரிசை எண் : 3417 சுவடி எண் : 1680-e

நெய்சீலை சூத்திரம்

ஏடுகள் : 1½ கி. எண்ணிக்கை 30 அளவு : 25 × 2½ செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : வால்மீகர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து ; தமிழ்.

தொடக்கம் :

பனிப்படு சீலை தன்னைப் பயனுட னெய்யில் தோய்த்து
மணிக்கிடை சுத்தி வைத்து மாறு நாழிகையே சென்றால்
தனிப்புடன் அவுள்த்துப் பார்க்கில் சுகமுடன் வாத னாடி
தனிப்புடன் சூடு கொண்டால் சாவில்லை பிழைப்பான் தானே! —1

முடிவு :

ஆடையை நனைத்துச் சுத்தி
அணிக்கிடை குறிப்பு நெய்யில்
ஊடவே சுத்திப் பார்த்து
உள்ளதோர் நன்மை தின்மை
தேராய்ந்து பார்த்து
சிகதலம் விளங்க நாளும்
நாடிய வால்மீகர் சொன்னார்
நானொன்று மறிந்தி டேனே —5

நெய்சீலை சூத்திரம் முற்றும்

குறிப்பு :

இதில், முன்போல துணியை நெய்யில் நனைத்து மணிக்கட்டில் சுற்றி சற்று நேரம் கழித்து அவிழ்த்துப் பார்க்கும்போது உள்ள நிலைகண்டு சாவு எப்போது என்று சொல்லுமாறுளது.

வரிசை எண் : 3418 சுவடி எண் ; 1080-f

நாடி குணங்கள்

ஏடுகள் : 10 கி. எண்ணிக்கை : 200 அளவு : 25 × 2½ செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : வால்மிகர் பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

உள்ளங்கால் முழங்கால்
பள்ள மிகுந்ததோர் மூக்கு ரண்டும்
துள்ளிய பிடிதோ டண்டை
சுத்தியே நெத்தி மூக்கு

தெள்ளி யுச்சி சூத்திரம்
செப்பிய நாடி குணங்கள்
மெள்ளவே குறித்துக் கொல்லாம்
விரித்திடு வால்மீகர் தாமே. —1

முடிவு :

கலங்கொம்புக் குணம்

கலங்கொம்பு மேகங்களை யறுக்குந் தோஷம்போம்
சலங்கொண்டு பின்னாகத் தள்ளும்
பிலங்கொண்ட ஆமையளுங் கோட்டுக்கய்யகலுங்
கனங்காஷம் போமே விளிபல நோய் போம்
பூனாகநீர்ச் சிறுப் பைம் போகஞ் சுரஞ் சன்னி மானே
இளைப்பு.

குறிப்பு :

இதில், உள்ளங்கால், முழங்கால், மூக்கு, நெத்தி, உச்சி முதலானவைகளின் குணங்கள் கூறப்படுகின்றன.

மேலும், விஷதோச குணம் கிஷ்ட்டின சிஞ்ஞை சுரம் வரும் வாறு, தோசம் வரும்வாறு, நாறுத்தம் பிஞ்சிறுடைய குணம், முதலியன உள்ளன. குணவாகடம் போலுள்ளது.

கடைசி ஏட்டின் பின்புறம், நெஞ்செரிப்புக்கும், அதிசாரத்துக்கும் மருந்து எழுதப் பட்டுளது.

வரிசை எண் : 3419 சுவடி எண் : 1681-a

(குணவாகடம்)

ஏடுகள் : $3\frac{1}{2}$ கி. எண்ணிக்கை : 100 அளவு : 18×3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குரு முன்னிற்கவும்
ஆயிரங் கடவுளானை அடியினைப் போற்றி
தீதுறு வியாதி தன்னை தெள்வுட னறிய வேண்டி

முடிவு :

நிலையிட்டே வாத்தை சொல்லுவதும்
நீதியல்லாதென வுணர்ப்பதுவும்
மால பிறகழு மகித்து தவமாதே
இத்த பித்தத்தின் குணமிதுவே. —16

குறிப்பு :

இதில் தலைப்பு இல்லை பாடல் அமைதிகண்டு தலைப்பு தரப்பட்டது. இது, எமது சுவடி எண் 761-a/D-1525 போன்றது. பிழைகள் அதிகம்.

வரிசை எண் : 3420 சுவடி எண் : 168-b

நாடி சாத்திரம்

ஏடுகள் : 14½ கி. எண்ணிக்கை : 450 அளவு : 13×3 செ.மீ
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர்: அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது. எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கரிமுக னடியை வாழ்த்திக்
கைதனில் நாடி பார்க்கில்
பெருவிர லங்கு லத்திலப்
பிடித்துட னடுவே தொட்டால்

முடிவு :

தண்ணீரை சரியாக விட்டு
இறுத்து ஆழாக்குத் தண்ணீர்
குடுக்கவும். கறிவேணு மென்றால்
குடுக்கவும். கிராணியாம் பாடமுத்து

குறிப்பு :

இதில், தலைப்பு இல்லாததால் பாட்டமைதிகண்டு தலைப்பு கொடுக்கப் பட்டது. பின்னர் உள்ள செய்யுட்கள் வைத்தியம் பலவற்றைக் கூறுகின்றன.

வரிசை எண் : 3421 சுவடி எண் : 1681-c

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 18 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சத்தி குன்மத்துக்கு நெய்

நேர்வாளங் குருநஞ்சு போக்கி பலம் - 5
வெள்ளைப் பாசாணம் பலம் — 1
நல்லெண்ணை $\frac{3}{4}$ -க்கு
தேங்காய் நெய் $\frac{3}{4}$ க்கு
கள்ளிப்பால் ஆழாக்கு.

முடிவு :

வெள்வெங்காயம் மிளகு யிதுவெல்லாம்
கூட்டி யிடிச்சு பசுவின் நெய்
னாழி நெய் கூட்டி வேகவைத்து
வண்டுகட்டிக் கொண்டு முப்பது நாள்
குடுக்கவும்

குறிப்பு :

இதில், கெற்ப வ்ப்புருதிக்கு, குடல் வாதத்துக்கு எண்ணை, குறைநோவு வெளுப்புக்கு, முலைக்குத்துக்கு மருந்து, ஆறாத புண்ணுக்கு எண்ணெய், வாதக் கரப்பன், சிலேற்பன பித்தம், தலை நோக்காடு நிற்கும் ஈர எண்ணெய், முதலான பல அரிய மருந்துகள் சொல்லப்பட்டுள்ளன,

—+ + +—

வரிசை எண் : 3422 சுவடி எண் : 1681-d

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 50 கி. எண்ணிக்கை : 1800 அளவு : 18 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

தோல்ச் சீவிப் ....
யினாலே ஒருகாயாய் எடுத்து ....யை
அரைத்நு நல்லெண்ணை விட்............
சீலையில் பொட்டணங் கட்டி நல்லெண்ணை
யிலே விளக்கேத்தி விலக்க ....

முடிவு :

வெத்தலை சீரலைபகாத்து எட்டு ணாளைக்கு
ஒருக்கால் மருந்து கொடு வரவும்
யிந்தப்படி ரண்டு மாசம் தின்னதீரும்.
பக்கவிசை யாறு விழும்

குறிப்பு :

இதில், மூன்று ஏடுகளுக்குப் பிறகு 2 ஏடுகளில் மந்திர, யந்திரங்களும், மாந்திரீகமும் எழுதப்பட்டுள்ளன.

மாட்டுயெரு வியாதி நசியம், துரிசு சுத்தி விபரம் எலிகடிக்கி, ஆறாத புண்ணுக்கு, மாடு சோளப்பயிர் தின்றால் கொட்டை பூ தின்றால் மருந்து, தேளுக்கு மருந்தீட்டுக்குக்கு, வைத்தியத்துக்கு மருந்து முதலியன உள்ளன.

வரிசை எண்: 3423 சுவடி எண் : 1681-e

நாடிப்பரீட்சை

ஏடுகள் : 14 கி. எண்ணிக்கை : 300 அளவு : 18×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக.

கருமுக னாடி வாழ்த்தி
கைதனில் னாடி பாக்கில்
பெருவிர லங்கு லத்தில்
பிடித்தடி நடுவே தொட்டால்

முடிவு :

உள்ளிட்ட வால்மிளகு கூட்டவும்
தண்டி திரபிவிக்கய்ய —
இவையெல்லாம் கிஷாயம் வைத்து
குடுக்கவும், தீரும்.
போர்மாந்த மென்றவாறு

குறிப்பு :

தலைப்பில், நாடிப்பரீட்சை என்பதோடு 'சரநூல் வாகடம்' என்றும் உளது.

இதில், தலைவலி தயிலத்துக்கு, வயறு பேதிக்கு மருந்து, புரைவிழுந்த புண்ணுக்கு, மூலக்கிராணிக்கு, குறுக்கு வலிக்கு, செவி னோவுக்கு, வாடைக்கு, செக்கில் எண்ணெய் வார்மல் தடுக்க, ரெத்த திரசிக்கி முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3424 சுவடி எண் : 1681-f

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 200 அளவு : 18 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வை கீரை இது கூட்டவும். புளி
புகையிலை அவபத்தியம். மறுபடி
ஒன்றும் ஆகாது. இந்த மருந்து
ஒரு மண்டலம் சாப்பிடவும்
யெட்டினாள் தலைக்கி கஞ்சிதெளு
வாத்து தலை முழுகவும்.

முடிவு :

அந்தக் காயை அரைத்து சிறுக
உருட்டி 2 ஒத்தியெண்க்குப் போர்
போது பாக்கு வெத்திலை யுடன் தின்ன
ஆனை வழகும். தண்ணீர் குடிக்க விடும்.

குறிப்பு :

உதிரி ஏடுகளாக உள்ளன.

இதில், மாலைக்கண்ணுக்கு, பிள்ளையள் மாந்தத்துக்கு மருந்து, பல பிணியளுக்கும், மஞ்சக்காமாலைக்கு மருந்து முதலியன உள்ளன.

வரிசை எண் : 3425 சுவடி எண் : 1682-a

அகத்தியர் வைத்தியம்-16 (சித்தர் பாடல்-16)

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 100 அளவு : 22×3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 764-c/D-1531 போன்றது. 'சித்தர் பாடல்—16' என்றே தலைப்புளது. இறுதியில் 'பச்சை பதினாறு முற்றும்' என்றுளதால், 'அகத்தியர் பச்சை-16' எனவும் ஆகும்

வரிசை எண் : 3426 சுவடி எண் : 1682-b

அமுதார்த்தக் குளிகை

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 200 அளவு : 22×3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

அமுதார்த்தக் குளிகை

மஞ்சள் ஒரு விராகனிடை நேக அரைத்துக்
கால்படி எலும்மிச்சம் பழச் சாத்தில்
கரைத்து அதில் ரெண்டு விராகநிடை
நாவிபோட்டு எட்டு நாள் ஊற வைத்து

முடிவு :

கோடாக் கினிக் குளிகை

இரதம் பச்சைனாவி நெல்லிக்காய்க் கெந்தகம்
அரிதாரம் வெண்காரம் நெரி விழை,
சாதிலிங்கம் சுக்கு நாணிக்காய் நெல்லிப்பருப்பு
கடுக்காய் காந்தம் நேர்வாளம் திப்பிலி
ஆக மருந்து பதினாலும்

குறிப்பு :

இதில், 'அக்கினிக் குமார குளிகை, நவிர்பேதி நாராயணன், சுரநவமணி, கஸ்தூரி மாத்திரை, சிந்தாமணி மாத்திரை, சூரியப் பிரபை மாத்திரை, கோடாக் கினிக் குளிகை ஆகிய குளிகைகள் உள்ளன.

வரிசை எண் : 3427 சுவடி எண் : 1682-c

நவரெத்தின சிந்தாமணி எனும் வச்சிர சிந்தாமணி

ஏடுகள் : 90 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 22×3 செ. மீ

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

முத்துப் பவளம் மாணிக்கம் வயிரம்
வயிடூரியம் கோமேதகம் புஷ்பராகம்
பச்சை, நீலம் இந்தி நவரெத்தினங்கள்
வகைக்கு பணவிடை — 5

மூணாம் பிள்ளை பெத்தவள் முலைப்பால் படி ½
வாங்கிவந்து பீங்கானில் வைத்துக் கொண்டு
கருங்கல்லினாலே நேத்தியாகப் பண்ணின குழிக்கல்லில்

முடிவு :

யிப்படி வியாதியினுட பிலன்கண்டு குடுத்து வரவும்
சறுவ வியாதியுந்தீரும். சறுவ சஞ்சீவித் தயிலம் முகிந்தது
முற்றும் குரு கடாட்ச முண்டாக வேண்டியது
ஸ்ரீ அடைக்கலங் காத்தவள்
துணையாக வேணும்

குறிப்பு :

இதில், நவரெத்தின சிந்தாமணி செய்கின்ற விதம் மிகவும் அரிதாகவும் பெரிதாகவும் உள்ளது மேலும் வாதராச்சதன், தாளகசெந்தூரம், லோகசெந்தூரம், காந்த செந்தூரம், பவள பற்பம், காந்த பற்பம், மூலத்துக்கு, மூலக் கடுப்புக்கு மருந்து, சீதக் கிராணிக்கு, ரெத்தக்கிராணிக்கு, தீராப் பிரமியத்துக்கு முதலான பல மருந்துகள் உள்ளன.

வரிசை எண்: 3428 சுவடி எண்: 1682-d

சன்னி பதிமூணுக்கும் குணம்

ஏடுகள்: 5½ கி. எண்ணிக்கை : 200 அளவு : 22×3 செ.மீ
பக்கத்திற்கு: 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை: முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம்:

தந்தரீக சன்னிக் குணம்

தந்தரிக மெப்பொழுதும் பொல்லா தாகும்
சலிப்புடனே உடல்நொந்து தாக முண்டாம்
சந்ததமு மாராட்ட மிருமல் பீனீர்
தலைநொந்தே உடல்காயும் தகமையோடு

முடிவு :

சறுவ சன்னிக்கும் கிசாயம்

திசமூல மரத்தை சுக்கு
சிறுமூலம் பெரிய மல்லி

வசமான கன்றங் காரி
வறளின் தாதளை முள்ளி
தசமான சித்தா முட்டி
பூசணி தழுதாளை வேரும்
நிசமாகும் மிறக்கிசாயம் கொண்டால்
நிலைகெட்டோடும் சருவ சன்னியெல்லாம்.
ஆக சன்னி பதிமூணுக்கும் குணமும் மருந்தும் முகிந்தது.
குருவுண்டு அடைக்கலங்காத்தவள் துணையாகவும்
குருசாமி துணையாகவும்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 109-f/D-166 'சன்னி பதிமூன்றுக்கும் வகை' என்பது இதனுடன் காணத்தக்கது.

வரிசை எண் : 3129 சுவடி எண் : 1682-e

குணவாகடம்

ஏடுகள் : $21\frac{1}{2}$ கி. எண்ணிக்கை : 600 அளவு : 22 × 3 செ.மீ

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

தோஷம் நாலுக்கும் பெருவிஷமம்
தோஷ மாத்ரு சினாஸி தோஷம் சீதசிஞ்ஞந்
தோஷம், கிஷ்ண்ண சிஞ்ஞந் தோஷம்
இந்த நாலு தோஷத்துக்கும் குணம்

ஒருபோது யிருபோது முப்போ துக்கும்
உத்தகுளிர் காச்சல்வந்து நிற்கும் போதும்
மறுபோது புள்கஞ்சீர் நோயு மீறி
வாதிக்கும் மனாவதனில் முள்போல் தொன்றும்

முடிவு :

சீலைமண் செய்து வெயிலில் வைத்து
உலந்த பிறகு ஒரு சாணாளங் குழிவெட்டி

யிறு சாணகலம் விஸ்தீரணம் வெட்டிப்
பசுவின் சாணம் ெ........ ....

குறிப்பு :

இதில். தலைப்பு இல்லை. சுவடி செய்யுள் நலம் கண்டு தலைப்பு கொடுக்கப் பட்டது.

இதில், சுரம் வரும் வாறு, சுரவீக்கக் குடிநீர், கெற்பிணி சுரத்துக்கு, வாத சிலேட்டுமத்துக்குக் கிஷாயம், பித்த சிலேட்டும சுரத்தின் குணம், சிலேட்டுமசுரத்தின் குணம், பாஷாண சுத்தி, தாம்பிர பஷ்பம், லவண சிந்தூரம், தரம்பிரபஷ்பம் முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3430 சுவடி எண் : 1682-f

சஞ்சீவி வாகடம்

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 150 அளவு : 22×3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : திருமூலர் பொருள்: மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

மாத்திரையள் செய்யும் விபரங்கள்

நாபி, சூதம், மனோசிலை, கெந்தகம்
நல்ல லிங்கம் அரிதாரம் திப்பிலி
நேர்வாளமும் வெங்காரம் வீரமும்
நெரி விஷமொடு நிரை சரி கூட்டி

முடிவு :

காத்துமாவில் புடம்போட்டு
நன்னாயிக் குளிர ஆரவிட்டு எடுத்து
வைத்துக்கொண்டு வியாதியளுக்கு
அனுப்பானங்களி லிடவும். மாத்திரையளுக்கு
யிந்தப்பிரகாரம் செய்து கூட்டிக்கொள்ளவும்.

சஞ்சீவி வாகடம் முகிந்தது. முற்றும்.

காலம் :

சறுபசித்தி வருஷம், அற்ப்பிசை மாதம் 21-ந் தேதி
சோமவாரம் விடிஞ்சு பத்து னாளியலுக்குள் எழுதினது.

முற்றும். பெரிய கன்னம னாயக்கர் குமரான் நாராயணசாமி எழுதி நிறைந்தது.
முற்றும்.

குறிப்பு :

இது, குறை சுவடிபோல் தோன்றுகிறது, நடுவில் தன்வந்திரி வாகடம் எழுதிய ஏடு ஒன்று உளது.

வரிசை எண் : 3431 சுவடி எண் : 1682-உ

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 50 அளவு : 22×3 செ மீ.
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

விரும கல்ப்பம் கொண்டு வந்து
அமுரி விட்டு ஒவர்மண் கூடக்கரைத்து
அடுப்பி பனித் தண்ணியில் கரைத்து
விறும கல்ப்பங் கூடப் போட்டு

முடிவு :

பஞ்சு வைச்சு கொஞ்சத் தீயெரிக்கப்
பஞ்சில் நெருப்புப் பிடிச்ச வுடனே
யெடுக்கச் செந்தூரம்

குறிப்பு :

இதில், தலைப்புப் பகுதி ஒடிந்துள்ளதால், மருந்துகள் அறியக்கூடவில்லை. தாளக பற்பம் என்ற ஒரு தலைப்பு தெரிகிறது.

வரிசை எண் : 3432 சுவடி எண் : 1683-a

ரோமரிஷி குருநூல் சூத்திரம் — 50

ஏடுகள் : 13 கி. எண்ணிக்கை : 300 அளவு : 30×3செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : ரோமரிஷி பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி; ஓம் நன்றாக குருவாழ்க
குருவே துணை

வராணமா முகத்தோனும் வல்லபையுங் காப்பு
வாக்கிலிருந் தோதுகின்ற வாணி காப்பு
பூரணமாய் நிறைந்தகுரு நாதன் காப்பு
புகழ்பெரிய சித்தருட பாதங் காப்பு
தாரணிக்குள் குருவருளால் அன்ப துக்குள்
சகலசித்துங் கைவசமாய் தானே சிக்குங்
காரணமாய்ச் சொல்லிவிட்டேன் வளலை யாதி
கருத்தெரிந்தால் ரசவாதங் கைக்குள் ளாச்சே! —1

முடிவு :

பாரய்யா முடியைவிட்டு அடியைத் தொட்ட
பாதகரே நீங்களென்ன வாதம் பாத்தீர்
ஊரய்யா சுடுகாடு சுத்தப் பொட்டல்
உள்ளிருக்கும் அடிமுடியை யுத்துப் பாரு
காரய்யா அடிமுடிக்கு மூல நூந்து
கண்டீரே கடல்நீரின் கருவைத் தானும்
ஆரய்யா காண்பதுவும் யோகி காண்பான்
அய்யனே குருனூலம் பதுதான் முந்தே! —51

ரோமரிஷிசாமி யருளிச் செய்த குருநூல் சூத்திரம்
அன்பதும் எழுதி நிறைந்தது முற்றும்
குருபாதமே துணையாக வேணும்
வாலாம்பிகை துணையாக வேணும்
மனோன்மணி துணையாக வேணும்
மீனாட்சி துணையாக வேணும்.

குறிப்பு :

இதில், சிதம்பர பூசை, முப்பு விபரம், சாதிலிங்கக் களங்கம்; வெடியுப்புச் சுன்னம் ஆகியவை உள்ளன.

× × + × ×

வரிசை எண் 3433 சுவடி எண் : 1683-b

அகத்தியர் வேதாந்தம் — 54

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 200 அளவு : 30×3 செ.மீ

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக

காசினியில் மானிடர்க்குப் பிணியே நீங்க
கருத்துடைய அகஸ்தியனார் பாடல் செய்த
வேசினிய நவசித்திரக் குழம்பு தன்னை
வேதாந்தம் பாடிவிட்டேன் சித்தியாக
ஆசினியில் சித்தாந்த மடக்கிப் போட்டேன்
அரியார்கள் சுத்திசெய்து ஆட மாட்டார்
மோசினிய சாபங்கள் நிவர்த்தி செய்ய
முன்குடுக்குந் தாப்பூல யாதி சொன்னேன் — 1

முடிவு :

எரித்திடுவார் யிருளுகுந்து வெந்த தண்ணீர் விட்டு
எரித்திடவே மனோசிலையும் சுத்தி யாச்சு
மரித்திடுவா ரில்லையப்பா துரைகட் கெல்லாம
மாகுமகஷ்த்தான தாளகத்தின் சுத்தி கேளு
பரித்திடுவாய் தாளகத்தைப் பணம்போல் வெட்டி
பருஞ்சீலை தனை மடித்து ....

குறிப்பு :

இதில், சரக்குச் சுத்தி, பொரிக்கார சுத்தி, மனோசீலை சுத்தி ஆகிய தலைப்புகள் உள்ளன. இந்நூல் முழுதும் எழுதுவதற்கு ஏடுகள் (வெற்றேடுகளாக) விடப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3434 சுவடி எண்: 1683-c

ரோமரிஷி — 500

ஏடுகள் : 146 கி. எண்ணிக்கை : 2500 அளவு : 30×3 செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : ரோமரிஷி பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

மூலமதி லாதார முடிவில் நின்ற
முர்த்தியெனுங் கிணேசனுட பாதங் காப்பு
சாலமெல்லாம் கடந்துநின்ற தாயின் பாதம்
சனகாதி மூலருட பாதம் போற்றி
காலமெனும் பிறப்பிறப்பு கடந்து நின்ற
கருணைதரும் நந்தீசர் பாதங் காப்பு
ஆலமுண்ட கண்டருடன் பாதம் போற்றி
அஞ்ஞூத்தை யானுரைக்க அன்பாத்தாளே காப்பே — 1

முடிவு :

கேளடா புசுண்டருமோ யெனக்குச் சொன்னார்
கிருபைபெற்ற மனதனத்தைச் சொல்லி வேன்யான்
கோளடா வாராது துரித ஞானம்
கொட்டினேன் அஞ்ஞூத்தில் கருவை யெல்லாம்
பாள .... — 506

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 538/D-1141 போன்றது.

இதில் 507 செய்யுட்களிருக்க வேண்டும், 505 பாடல்களே உள்ளன.

வரிசை எண் : 3435 சுவடி எண் : 1684-a

அகத்தியர் — 16

ஏடுகள் : $4\frac{1}{2}$ கி. எண்ணிக்கை : 150 அளவு : $17\frac{1}{2} \times 3$ செ. மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 764-c/D-1531 அகத்தியர் வைத்தியம் — 16 போன்றது.

இச்சுவடியின் தலைப்பில் 'சித்தவெண்பா' என்றுளது.

வரிசை எண் : 3436 சுவடி எண் : 1684-b

தன்வந்திரி வாகடம்

ஏடுகள் : $55\frac{1}{2}$(36-40 ஏடுகள் இல்லை) கி. எண்ணிக்கை : 1000
அளவு : $17\frac{1}{2} \times 3$ செ. மீ. பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : தன்வந்திரி
பொருள் : மருத்துவம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்

பூர(ண)மா யுள்முலப் பொதிற் சூடாய்
புகையெழும்பி மேகமதாய் சிரசில் சூடாய்
காரணமாய் நீரெழும்பிப் பீனிசம்போல் கொள்ளும்
கனலெழுந்தே வாயுவதாங் காபால மெல்லாம்

முடிவு :

போச்சென்றேன் குட்டவகை பதினெட் டுந்தான்
முனையான குனியங்கள் பில்லி எல்லாம்
காச்சென்ற தயிலமது வரிச மூள்கி

கட்லில்புக்கு மேகராசாங்கந் தாலே
ஆச் சென்றேன் .... — 148

குறிப்பு :

இதில், சயத்துக்கு, பாண்டு கிறாணி வகை, கரிச்சாலை லேகியம், மூலக் குணம், மூல கற்மம், சூலை பதினெட்டுக்கும் மேக ராசாங்கத் தயிலம் முதலியன உள்ளன. பிழைகள் மலிந்துள்ளன.

இது 'அகத்தியர் கர்மகாண்டம் 300'-ன் தொடக்கப் பாடலைக் கொண்டுள்ளதால், அந்த தலைப்புள்ள சுவடியோ என்ற ஐயம் எழுகிறது,

வரிசை எண் : 3437 சுவடி எண் 1684-c

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 48 (53-100) கி. எண்ணிக்கை: 1000 அளவு : $17\frac{1}{2} \times 3$ செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

மூணுநாள் குடுக்கவும், மறு பத்தியம்
உப்பு வறுத்து கூட்டவும், முளகு
சிறுகீரை கூட்டவும். வியாதி தீரும்

குருவுண்டு.

முடிவு :

காதில்ச் சலம், இரைச்சல் இவை நிற்கும்
குருவுண்டு

சந்திரனையும் சூரியனை சனியனையும்
புமது சூரணம் பண்ணி சாப்பிடப் பச்சி
வாதம், குல்மம்ந் தீரும்.

குறிப்பு :

இதில், தொடக்கம் 52 ஏடுகள் இல்லாததால் தலைப்பு தெரியவில்லை. முடிவில்லாத குறைசுவடியானதாலும் தலைப்புகாண இயலவில்லை.

இதில், நீர்க்கோர்வைக்கு, நீராம்பல், விஷபாகத்துக்கு ஊது காமாலை, சோகை' பித்தபாண்டு, இரத்த பிரமியம், சீப் பிரமியத்துக்கு, சந்தனாதித்தயிலம், ராமபாணத் தயிலம் முதலான தலைப்புகள் உள்ளன. மருந்துகள் செய்முறையும், தீரும் வியாதிகளும் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3438 சுவடி எண் : 1684-d

மாந்திரீகம்

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 50 அளவு : $17\frac{1}{2} \times 3$ செ.மீ.

பக்கத்திற்கு : 4 – 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்
ஓம் கணவனைக் கொ(ன்ற)ண்ட சண்டாளர்
என் முக்கண்ண மகன் யிவனை முப்புறு
திங்கள் புத்தடி நிற்கும் விசமாக

முடிவு :

ஸ்ரீ இராமசெயம்
ஓம் நய கட்டே கட்டு நாய் கூறு கட்டு ... .
நீ கட்டுலே நாற்பு பூவே தூரிபு ஓம்.
குருவே துணை
(சக்கரம் உள்ளது)

குறிப்பு :

இதில், மந்திரங்களும் சக்கரங்களும் உள்ளன.
இடையில் ஒரு மருத்துவ ஏடு உள்ளது

வரிசை எண் : 3439 சுவடி எண் : 1685

அகத்தியர் — 600

ஏடுகள் : 131 கி. எண்ணிக்கை : 4000 அளவு : 30×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : சிறிது பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க
குருவே துணை.

ஆதியெனும் பராபரமாய் அண்ட மெல்லாம்.
அறிவோமென் றேவுதித்த அனாதி பாதம்
சோதியெனு மனோன் மணியாம் வாலை பாதந்
துலங்குகின்ற மாலயனை துதித்து நன்றாய்
நீதியுள்ள முனிவரென்பார் பாதம் போற்றி
நிஷ்களா னந்தகுரு பாதம் போற்றி
வேதியர்கள் நான்மறையைத் துதித்து நாளும்
வேல்முருக னைங்கரனைப் போற்றி செய்வாம். — 1

முடிவு :

கூறுடன் சகலமான வியாதியுங் குடிபோ மென்று
பாரினில் சனங்களுக்கு சிந்தாமணியெனும் கருவோமே ! —603

காலம் :

துற்முகி வருஷம் மார்கழி மாதம் 7-ந் தேதி மங்கள வாரதினத்தில் திறையோதசியும் ரோகணியுங் கூடின சுபதினத்தில் சந்தன அடைக்கலம் பிள்ளை குமாரன் ஆறுமுகம் அகத்தியர் அருளிச் செய்த வயித்தியம நடுக்காண்டம் 603 எழுதி முகிந்தது. முத்தும். வாலை மானோன்மணி துணையாகவேணும்,

குறிப்பு :

இதில், காரீய செந்தூரராம், தாம்பிர செந்தூரம், ரசபற்பம், பெரும்பாடு ரெத்த பித்தத்துக்கு நெய், கோடா குளிகை மாத்திரை, பாண்டு லேகியம், சயக்காச்சலுக்கு, கோரோசினை குளிகை, ரெத்த பித்தத்துக்கு, கபாலச்சன்னி, மண்டைக்குத்து, காதடைப்புக்கு, கண்டமாலைக்கு, நடுக்குவாதத்துக்கு, ஆனந்தத் தாண்டவன் மாத்திரை, ராமபாணம் சகல சுரத்துக்கும், சுப்பிர தீபக்குளிகை முதலான பல தலைப்புகள் உள்ளன. இடையில் சில செய்யுட்கள் இல்லை.

வரிசை எண் : 3440 சுவடி எண் : 1686-a

அகத்தியர் _ 1500 _ நாடி

ஏடுகள் : 19 கி. எண்ணிக்கை : 600 அளவு : 30×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 872/D-1816 நாடியின் குண வாகடம் (1500) போன்றது. மேலும் இது சுவடி எண் 301-h/D-539, போன்றது.

அகத்தியர் 1500-ல் முதற்பகுதி மட்டும் உளது.

❀❀

வரிசை எண் : 3441 சுவடி எண்: 1686-b

வாயுவு 10-க்கு பேரும் குணமும்

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 50 அளவு : 30×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

வந்தநற் பிராண நபானன்
வளருமா வியானன் னோடு
தந்தமுன் னுதானன் மிக்க
சமானனும் நாகன் கூர்மன்

முடிவு :

மந்திரநிற் ஜோசத் தானம்
மறையவர் முனிவர் சொன்ன
இந்திரத் திசைசேர் வாய்வு
யென்றிது யறிந்து பாரே! —10

கந்தன் குருசாமி துணை.

குறிப்பு :

இதில், 10 வாயுக்களின் பெயர்கள், அவற்றின் செயல்கள் கூறப்பட்டுள்ளன.

—★★—

வரிசை எண் : 3442 சுவடி எண் : 1686-c

ஊழி வைத்தியம் (அகத்தியர் பத்தாங் காண்டம்)

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 70 அளவு : 30 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

அவமாம் நாக்குத்தான்...........லெட்சணமே ! —200

ஆதிமூலம் லெட்சிக்க வேணும்
மனோன்மணி துணையிருந்து காப்பாற்றவும்

நூல்

கேளப்பா ஊளியென்ற காத்தைச் சொல்வேன்
கெடியான சாமளா தேவி யாலே
ளாளப்பா மைப்போலே கருத்து நிற்குங்
கண்ணுக்குத் தோற்றாது கடின மெத்த

முடிவு :

சோதியுடன் வந்ததொரு ஊளி யுந்தான்
சொல்லுமுன்னே போகுமடா துன்பம் நீங்கும்
வியாதியுடன் மூதண்டங் கொண்டு வந்தால்
யென்மகனே ஊளியது ஒதுங்கிப் போகும்.

ஸ்ரீ ராம செயம்
சாமளா தேவி துணையாகவும்.
தெட்சணாமூர்த்தி பாதமே கெதி.

குறிப்பு :

இதன், தொடக்கத்தில் முன் சுவடி ஏதோ ஒன்றின் கடைசிப் பாடல் முடிகிறது. பின்னர் நூல் தொடங்குகிறது.

இது, எமது சுவடி எண் 465–a/D-1030 'ஊழி வைத்தியம்' போன்றது. சுவடியில் இந்தத் தலைப்பு இல்லை. செய்யுள் அமைதி கருதி தலைப்பிடப்பட்டது. தலைப்பில் அகத்தியர் பத்தாங் காண்டம் என்று மட்டுமே உள்ளது.

★ ★ ★

வரிசை எண் : 3443 சுவடி எண் : 1686-d

பித்தம் நாற்பதுக்கு குணம் - பிரதான பித்த குணம், படுவாசய குணம்

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 50 அளவு : 30 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பித்தத்தின் குணங்கள் தன்னில்
 பிரதான பித்த மாகில்
மெத்தவே கடுத்து ளைந்து
 மேனியுங் கருகிக் காட்டும்

முடிவு :

தக்கதாங் கருப்பந் தன்னை
 தவித்திடுங் களவு தன்னில்
சுக்கிடுஞ் சுக்கு லத்த
 சுக்கில நாளுங் காந்து
மிக்கிர சுக்கி லம்போல் நீரில்
 வெள்ளை காணும் கண்டால்
சுக்கில பித்த மென்று
 சொல்லினர் சுருதி நாலோர்

குறிப்பு :

இதில், பித்தத்தின் குணங்கள், மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3444 சுவடி எண் : 1686-e

சுரதோஷ நாளறியும் படி

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 100 அளவு : 30×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஆமப்பா சுரதோசத் தாண்மை யெல்லாம்
அறைந்திட்டேன் முன்தேதா னடக்க மாக
ஓமப்பா நட்சேத்திர மலத்தை தொந்தம்
முற்றுக்கேள் புலத்தியனே மச்சமுனி நீங்கள்
வேமப்பா அசுபதி நாள் வந்தசுரந் தானும்
விட்டுப்போ மெட்டானா னப்பா

முடிவு :

தொந்தமென்ற வுயிர்மீனும் வாதம் பித்தங் கீழே
சுழன்றுதான் செலேற்பனத்தில் துடரு மாகில்
தொந்தமொன்ற மருந்தேது தடுப்பா ராறு
துஞ்சுவார் பட்சத்தில்த் துஞ்சு வாறே !
மனோன் மணிதுணை

குறிப்பு :

இதில், இன்ன நட்சத்திரத்தில் சுரம் வந்தால் இத்தனை நாளில் தீரும் என்றும், வாரமும், நாளும் பகையறியும் படி, வாதசுரம் அவத்தை, பித்த சுர அவத்தை, செலேற்பன சுர அவத்தை என்று முள்ளன.

★ ★ ★ ★

வரிசை எண் : 3445 சுவ்டி எண் : 1686-f

அகத்தியர் நாடி சூத்திரம்

ஏடுகள் : 33 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 30×3 செ.மீ

பகத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

சீர்கொண்ட வயித்திய னாதர் திருவுளஞ்
சிறந்து நன்ப்பால்
பார்கொண்ட நோயோர் தம்மை
பார்க்கிற வகைபோ டெட்டாம்
வேர்கொண்ட நாடி பார்த்து
மெய்யினைத் தொட்டுப் பார்த்து
யோர்கொண்ட ரூபம் பார்த்து

முடிவு :

மிகுத்த கொட்டாவி நெட்டு யிர்ப்பு
அவமாம் நாக்குக் குளர அணைத்தால்
சாத்தியந்தா னன்றியே புவனம் மீபாற்றும்
அகஸ்தியனார் பூமியில் சொன்ன தூது லட்சணமே ! 202

சரசுபதியே நமா. கணபதியே நமா. கணபதியேங். சரசுபதியேங்.
சிவாய நம. குருவேதுணை. அனுமந்த மூர்த்தியார் பாதமே கெதி.

குறிப்பு :

இதில், இடையிடையே ஏடுகள் ஒடிந்தும், முறிந்தும் உள்ளன. இதில், வாத சன்னி பிழையாக்குறி, பித்தசன்னி பிழையாக்குறி, நீரில் பார்க்கிற குறி, மூன்று நாடி, நிதானம், சன்னி நிலை அறியும்படி சன்னி பதிமூணுக்கும் குணம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 3446 சுவடி எண்: 1686-g

வயித்தியர் லெட்சணம்

ஏடுகள் : 4½ கி. எண்ணிக்கை : 150 அளவு : 30 × 3 செ.மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுபெற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

வேதியர் ரெண்டாஞ் சாதி
 மிக்கநல் வசியர் மேழி
மாதுயர் துவச னான்கும்
 மன்னர் ஆயுறு வேத ... ...
 × × × × × ×

வாதுபுரி வயித்தியரே சொல்லக் கேளீர்
 வயித்தியற்குத் தலைமூன்று கண்ணு மூன்று
னீதமுட னாலுமுகம் ஆறு கையும்
 நேரான சரீரமெட்டும் பாதம் நாலு
இதையறிந்தால் வயித்தியனாம் வியாதி தீர்ப்பான்
 இதையறியா திருந்தாக்கால் மடைய னாவான்
சேதமில்லா மனிதரையு மிவனே கொல்வான்
 செத்தசவ மாகுமிவன் செய்மருந்து பொய்யே !

முடிவு :

கூட்டியுறவாகச் சிங்கென்று உருலெச் சந்தான்
 யாங்கியே வடுகனுட சத்தியந்தான்
 பரப்பிரம்மன் மாயனொடு பகரக் கேளே

குறிப்பு:

இதில், பண்டிதன் லட்சணம், பரியாரி லெட்சணம் முதலான லட்சணங்கள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3447 சுவடிஎண் : 1686-h

சரனூல்

ஏடுகள் : 6 வ. எண்ணிக்கை : 300 அளவு : 30 × 3 செ.மீ

பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் மனோன்மணி துணை

வாராய் பார்பதியே சரசாஷ்த்திர மென்றொரு
சாஷ்த்திரமுண்டு. அது யெப்படி யென்றால்
சகலசாத்திரமும் ஒரு குசக் கலமாகவும் சரசாஷ்த்திரம்
ஒரு தங்க பாத்திரம் போலே யிருக்கும்.

முடிவு :

நாள்தோறும் விசாரிச்சுச் சிவயோகி யானவன்
இந்தப்படி அறிந்து நடந்தால் நல்ல சிவயோகி
யாவான்
மனோன்மணி கிருபை செய்து சரனூல்
சித்திக்கும் படியாய் தயவு செய்ய வேண்டியது

குறிப்பு :

இது பார்வதி தேவியாருக்குச் சிவபெருமான் சொன்னது போல உள்ளது. இறுதி மாறுபடுகிறது.

இதன் இறுதி ஏட்டின் பிற்புற முதல் 12 ஏடுகள் மருத்துவமும், மாந்திரீகமும் எழுதியவை. ஒடிந்தும் முறிந்தும் உள்ளன

வரிசை எண் : 3448 சுவடி எண் : 1687-a

அகத்தியர் குருநூல் முப்பு – 50

ஏடுகள் : 21 கி. எண்ணிக்கை : 350 அளவு : 30 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை: முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது எமது சுவடி எண் 537 b D-714 போன்றது.
இதன் பின் ஏட்டில் 'கல்லடைப்புத்திர மருந்து' எழுதப்பட்டுள்ளது.

வரிசை எண் : 3449 சுவடி எண் : 1687-b

குரு நீலகண்டர் −50

ஏடுகள் : 14 கி. எண்ணிக்கை : 600 அளவு : 30×3 செ.மீ

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : நீலகண்டர் பொருள்: மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 675-i/D-1325 'அகத்தியர் - வைத்தியம் - சூத்திரம் திருநீலகண்டம்' போன்றது.

இதில், தொடக்கம் முதல் 47 செய்யுட்களே உள்ளன.

வரிசை எண் : 3450 சுவடி எண் : 1687-c

பூரணாதி லேகியம்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 100 அளவு : 30×3 செ. மீ.

பக்கத்திற்கு 6—7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

அத்தி முகவ னடிபணிந்து கை கூப்பிச்
சித்திதரு பூரணாதி செப்புகிறேன்-வெத்திதரும்
வேறான சுக்குபெருஞ் சீரகம் மதுரம்
காறான கிராம்புகனி மிளகு.

முடிவு :

விந்தையுட னக்கிளி போல்ப்
பசி யெழும்பும் மன்னோம
பாலன்ன மதக்க வயரெடுக்கச்
சாப்பிட்டால் திற்குமது
காந்தியுண்டாகும் க்னக வசீகரமாம்
மஞ்சேர்ந்த பூரணாதி செய்து முற்று.

குறிப்பு :

இதில், மேற்படி லேகியம் செய் முறையும், தீரும் நோய்களும் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3451 சுவடி எண் : 1687-d

முப்புவழலை

ஏடுகள் : 18 கி. எண்ணிக்கை : 600 அளவு : 30 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்

தெளிந்தபெரு நூலெல்லா மாடிப் பார்த்து
செப்புகுரேன் இதுக்குத்தான் வழலைப் போக்கு
பொளிந்தமளை யுவாக்காட்டில் சிலத்தைப் பார்த்தால்
புல்லன்றிச் சிவந்திருக்கும் பூமி னாதம்.

முடிவு:

பாகுபெறப் பத்தியங்கொள் கற்பூர உப்புப்
பரு மாற்றம் வென்னீரும் புளியைத் தள்ளு
ஆகுமடா புகையிலையும் சிற்றின்ப மாகா
அப்பனே யினிவேரே அரையக் கேளே !

குறிப்பு :

இதில், ரசகற்பூரம், காலாந்தக செவுரி, கல்ப்பூரங்கொள்ளக் குளம்பு, பாண்டகற்பூரம் ஆகிய தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3452 சுவடி எண் : 1688-a

திருமூலர் குணவாகடம்

ஏடுகள் : 16 கி. எண்ணிக்கை : 500 அளவு : 30 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : திருமூலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வயது அங்கவினம்
மந்தன், ஊமை, குருடன்

.............ஸ்டொன்றில் பொருந்தில்லியாகு
தாண்மிக வாயிற்றாணி முழுதாளும்
பாண்மை மிகுந்திடிர்ப் பாயிரத்து மில்லையே ! —8

முடிவு:

வியாதிகள் போகவே வெகுநாள்ச் சடமுரப்
பயாதித் திரைநரை பரங்கத் தவிர்த்திடக்
கயாதிக் கவனங் கலந்தெங்குஞ் சுத்திட
அயாதியு ஞானமஞ் சாகுஞ் சித்தியே! —126

திருமூலநாயனார் அருளிச் செய்த
குணவாகட முத்துப் பெத்தது.

குறிப்பு:

இதில் முதல் ஏடு இல்லை. இடையிடையே செய்யுட்கள் இல்லை. ஆண்,பெண், அலி ரெட்டைப்பேரு, பஞ்சபூதப் பிண்டோற்பத்தி முதலான பல தலைப்புகள் உள்ளன.

இதற்கு முதல் ஏட்டில் விநாயகர் அகவல் தொடக்கம் முடிவில்லாமல் உள்ளது.

வரிசை எண் : 3453 சுவடி எண் : 1688-b

அகத்தியர் வைத்திய சாரம்

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 400 அளவு : 30 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

....ன்றாய்ப்
பட்சமாகக் குரிகுண மெய்ப்ப ரிட்சை
பார்த்துப் பரிகாரமாய் மருந்து பகரா ராகில்
தச்சமாக் கிளைகுலங்கள் வேரோ டத்துத்
தரணிதனில் வெகுபாவந் தலைமேற் கொண்டு
இச்சைபேர் எழுநரகில் கெந்திப் பின்னும்
ஈடேத்த மில்லாம லிருப்பார் தானே ! —8

முடிவு :

ஆனவிவ் வகையெட்டும் அறிந்த பேரை
அவனிதனிற் பண்டிதரு மறியச் சொல்வார்
ஈனமில்லாப் பொறியடக்கும் பெரியோ ரன்றி
எயிதாது யாவருக்கும் யியம்புங் காலே ! —36

அகஸ்திய முனிவரருளிச் செய்த
வயித்திய சார முத்துப் பெத்தது

குறிப்பு :

இதில், முதல் ஏடு இல்லை. கடைசி ஏடு கொண்டு தலைப்பிடப்பட்டது. பிண்ட உற்பத்தி, கருத்தரிக்கும் விதம், தச வாயுவுகளின் குணம், வாயுவிருப்பிடம், தச நாடிகளின் பெயர் முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3454 சுவடி எண் : 1688-c

அகத்தியர் நோயின் சாரம்

ஏடுகள் : 14 கி. எண்ணிக்கை 600 அளவு : 30×3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கரிமுகக் கடவுளைக் கவுரி மைந்தனை
விரிகடல் வாயனை வேதவே தாந்தனை
யரிதிரு மருகனை யாதி சோதியை
பரிவொடு தொழுதவர் பாதம் போற்றுவாம். —1

முடிவு :

உரைவிடும் பிராண னென்று
உண்மை சொல்வதன் கடத்திற்
பரையது கட்டிச் சாற்றும்
பண்டிதர்க் கெல்லாம் பாரே ! —66

அகஷ்தியர் அருளிச் செய்த
நோயின் சார முத்துப் பெத்தது

குறிப்பு :

இதில், மாதங்களில் நாடி பார்க்கும் காலம் அறிதல், நாடி பார்க்கில், பலித்திடாக் காலமறிதல், மந்த சுரக் குணம், சுரங்களும் பாஷாணத்தால் தீரும் கர்ப்பந் தரித்த நாடி குணம், காலன் பிடிக்கும் நாடி முதலான பல தலைப்புகள் உள்ளன.

—+ + +—

வரிசை எண் : 3455 சுவடி எண் : 1688-d

அகத்தியர் அவிழ்த சாரம்

ஏடுகள் : 25 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 30×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள்: மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

